KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு அக்டோபர் மீ 4உ [No. 39

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 609

2. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 611

3. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுப் படலம். 614

4. அப்பர் (64-கலை இதிகாசம்-பாண்டவகௌரவர்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 617

5. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 618

6. தற்காலக் கொள்கைகளுந் தமிழும்
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A, L.T. 621

7. ஆட்டாரோ அந்தத் தலை (சிறு கதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 622

8. வர்த்தமானம் 624

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 7.

கவிதைதிகழுங் கருத்தில் கடவுளின்நினைவு, மறைந்தேனும் மறுபேர் கொண்டேனும், தவழ்தலொழியாமை திண்ணமாந்தன்மையை, எட்வின் ஆர்லிங்டன் ராபின்ஸன், ஜான்கூபர் பாய்ஸ், சார்லஸ் ஏ. பியர்ட், முதலியவர்களுடைய கடிதங்களினின்று இதன்முன் காட்டினோம். தற்காலம், உலகடங்கலும் உள்ள பூதசாஸ்த்திரநிபுணர்களின்முன்னணியில் நிற்பவரும், இதுபற்றியே 1930-வது ஆண்டு நோபெல் பரிசு பெற்றவருமாகிய ஸர். ஸி. வி. இராமன் அவர்கள், வில் ரோன்டிற்கு எழுதிய மறுமொழி, முன்னே இயம்பியதற்கு மாறானவோர் நிலையைத் தெரிவித்து நிற்கின்றது. எழுதுகின்றாரவர்—

அன்புடைய மிஸ்டர் ரோன்ட்,

இந்திமிடத்திய இன்பத்திற்காகவும் நாளைய அற்ப நம்பிக்கைகளுக்காகவும்மாத்திரம் வாழ்கின்ற வாழ்க்கையை நான் ஒருபோதும் உயர்ந்ததாக மதித்ததில்லை. நாம்வந்து தோன்றியிருக்கக் காண்கின்ற இவ்வுலகத்தின் அதிசயமிக்க, பெரியவொரு, இரகசியத்தினுள் துளைத்துச்செல்ல இயலாதவொரு நொய்ம்மையுடைய கருவியாம் இம் மானுடமனம். ஆயினும், இவ்வுலக அதிசயத்தைப்பற்றி இப்பொழுது நான் அறிந்திருப்பதைக்காட்டிலும் இன்னுஞ் சிறிது முயன்று அறியும்பொருட்டு உயிர்வாழ்ந்திருப்பது உபயோக முடையதேயாம் என்று நான் எப்பொழுதும் எண்ணியுள்ளேன். புத்தியின் தூண்டுதலும் பூதசாஸ்த்திர ஆராய்ச்சிகளின் தூண்டுதலும், உண்மையாக, என் வாழ்க்கையையும் செய்கைகளையும் இயக்குகின்ற முக்கியசக்தியாக இருந்திருக்கின்றன. மத அனுஷ்டானங்களும் சித்தாந்தங்களும்என்வரையில் யாதும் பொருளுடையவைகளாய் நான் கருதுவதில்லை; ஆயினும் புத்தருடைய போதனைகளும் இயேசுகிறிஸ்துவின் போதனைகளும், அவைகளை அப்படியே எழுத்தளவே எடுத்துக்கொள்ளாவிடத்து (if not taken too literally) மதிப்பிற்குரிய பொருளுடையவைகளே என்று நான் ஏற்றுக்கொள்வதுடன், காலமானதுஅவைகளைக்குறைத்துவிடாதென்றும்நம்புகின்றேன். வருந்தி முயலவும், சாதிக்கவும், அப்படியே செய்ய மற்றவர்களுக்கு உதவிபுரியவும், உள்ளவொரு விருப்பம், இவைகள் என்னைநடத்திவைத்த இயக்கச் சக்திகளாம். சுயஅனுபவம் இன்றிச் சுயஒக்கமே இன்பத்தின் உண்மையான பிறப்பிடமாவதைக் காண்கின்றேன். தடைசிபக்ஷத்தில் உலகமுழுவதையும் வென்றுபெறுவதைக்காட்டிலும் ஒருவன் தன்மீது கொள்கின்ற வெற்றியே பெரியதாம்.

இப்படிக்கு
ஸி. வி. இராமன்.'

மிகச் சுருக்கமாக இக்கடிதம் எழுதப் பெற்றிருப்பதால் அதனை எழுதியவருடைய கருத்து இன்னது தான் என்று நிச்சயமாக உணர்தல் அருமையாகவே இருக்கின்றது. இவ்வாக்கியங்களின் மயக்கம்மொழிபெயர்ப்பின் தளர்ச்சியால் நேர்ந்ததென்று எண்ணிவிடவேண்டா. வருந்தி முயன்று தானுஞ் சாதித்து மற்றவர்களையும் சாதிக்கும்படி உதவவேண்டுமென்னும் ஊக்கமுடையவராயிருப்பதைக் கூறினரேயன்றிச் சாதிக்க வேண்டுவது எதனை என்பதையும் தெரிவித்திருப்பாராயின், ஸர். ஸி.வி. இராமன் போன்ற ஒருவரிடமிருந்து நம்போன்றவர்பெறவல்ல பயனைப்

பெற்றவர்களாயிருப்போம். முயல், சாதி, என்னும் இவைகளோ செயப்படுபொருள் குன்றாத வினைகள்; ஆயினும் அவை இங்குக் குன்றி நிற்கின்றன. "எதனைச் சாதிப்பதற்காக உயிர்வாழ்க்கை நடத்துகின்றீர்" என்று வில் ரோனட் கேட்டதற்கு ஸர்.வி.வி. இராமன் "நானும் சாதித்துப் பிறரையும் சாதிக்க வைக்கவே வாழ்கின்றேன்" என்ற மட்டுமே கூறுவாராயின், இவர் மறுமொழியினின்று ஒன்றும் அறிந்துகொள்ள இயலாமற்போகின்றதே. ஒருகால்பின்வரும் தன்னடக்கத்தையும் சுயவெற்றியையுந்தான் அச்சாதனையாகப் பேசினாரோ, யாதோ. அப்படியாயின் அதன் தகுதியை யாருமே மறுக்கமாட்டார். எனினும், "தன்னையே வென்று அடக்கிக்கொள்வதே யாதினும் சிறந்த வெற்றியாம்" என்பதனைய வாசகங்கள் மிகமிகப் பொதுமையானவை. ஆதலின், அது, ஆழ்ந்த பொருளுடையதாக இருப்பினும் இருக்கலாம், அல்லது, எப்பொருளையும் குறிக்காமற் போயினும் போகலாம். ஸர் வி. வி. இராமன் போன்றவர் திறத்தில் பொருளுடைய உரைகளையே நாம் எதிர்பார்த்தல் வேண்டும். என்றாலும், இவர் கருத்து இதுதான் என்று நிச்சயமாக எண்ணற்கில்லை. ஏனெனில், இவர் கடிதத்தின்படி, 'கடைசி பக்ஷமாகவே' இந்த வெற்றி கூறப்பட்டிருக்கின்றது. முதலும் இடையும் வேறு சில இருத்தல் வேண்டும். அவைகளைக் கூறிவைக்காமல், கடைசிபக்ஷத்தைமாத்திரம் கூறியிருப்பதினின்று நாம் எதனைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது விளங்கவில்லை.

இறுதிவாசகம் இப்படி முடிய, அறிதற்கரிய இவ்வுலகத்தைப்பற்றிய இரகசியத்தினதிசயத்தை இன்னுஞ் சிறிது முயன்று அறிந்துகொள்ளும்பொருட்டு உயிர் வாழ்வதாயின் அவ்வாழ்க்கை பயனுடைத்தாம் என்று இக்கடிதம் துவக்கத்தில் கூறுகின்றது. ஒருகால், இவ்வறிவுதான் இவர் நினைத்த சாதனையாக இருப்பினும் இருக்கலாம். ஆயினும் இந்தக் குறிப்பை ஐயமின்றி எவ்வாறு ஏற்றுக்கொள்ள இயலும்? அறிவானது ஒன்றினைச் சாதிப்பதற்குரிய ஒரு கருவியேயன்றி அதுவே சாதனையாய்விடும் என்று ஸர் வி.வி. இராமன் போன்றவர்களும் கருதமாட்டார் என்றே எண்ணுகின்றோம். ஆதலால், உலகத்தின் அதிசயமான இரகசியத்தினுள் நுழைந்துபுறப்படுவதால் எவ்வகை நலம் அல்லது பயன் பெறலாம் என்று எதிர்பார்த்து, இவ்வாழ்க்கையை விரும்புகின்றார் என்று அவர்கூறியிருந்தால் அதுவன்றோ நமக்குச்சாலஉதவியாக இருந்திருக்கும். இப்படிக்கு யாதுமின்றி, "நல்வாழ்க்கைவாழும்பொருட்டுஅவ்விரகசியத்தைஅறிய முயல்கின்றேன்" என்று உரைப்பதற்குமாறாக "அவ்விரகசியத்தை அறியும்பொருட்டு இவ்வாழ்க்கை வேண்டப்படுவதாகின்றது" என்று கூறுகின்றாரே இவர். மேலும், வில் ரோனட் எழுதிய வொரு கடிதத்திற்குப் பதில்இது. அக்கடிதத்திலோ, "இந்த இரகசியத்தை அறியஅறிய நம்முடைய வாழ்க்கை பொருளும் பயனுமிழந்து தாங்கமாட்டாததாகிவிட்டதே; இதற்கென்ன சொல்லுகின்றீர், நீர்" என்று வில் ரோனட் கேட்டிருக்க, ஸர். வி.வி. இராமன் மீண்டும், அந்த இரகசியத்தை அறிந்துகொள்ளும் பொருட்டே நாம் உயிர்தாங்கி யிருத்தல் வேண்டும், என்று பதில் எழுதுவாரானால் அப்புறம் எம்மனோர் என்னசெய்வது.

அன்றியும், இன்னுமோர் இயற்கைப்பிறழ்ச்சியும் இவ்வாசகத்தினுள் அடங்கியிருக்கின்றது. அறிந்து வாழ்வதற்கும் அறியவாழ்வதற்கும் இடையே கிடக்கின்ற வேற்றுமை சாலப் பெரிது. அறிவானது நம்முடைய வாழ்க்கை பயன்பெறுவதற்கு உதவலாம். எனினும், அவ்வறிவைப் பெறும்பொருட்டே வாழ்வதெனின் அவ்வாழ்க்கையோ சுவையற்றதாகிவிடும். "இவ் வாழ்க்கையில் பொருளும் பயனும் நிறைந்த அழகிருக்கின்றது; அதைநோக்கி மகிழ்வோம்" என்னும் மனப்பான்மைக்கும், அதற்கெதிர், "இவ்வாழ்க்கையில் பொருளும் பயனும் உடைய அழகு உளதோவென்று நாம் அறியும்பொருட்டுப் பயின்றுபயின்றுஊன்றிநோக்குவோம்" என்னும்மனப்பான்மைக்குமிடையே கிடக்கும்வேற்றுமையை யுணர்ந்துகொள்ளவேண்டுமென்பது மிகவும் அவசியமாம். கடவுள் மணந்தோய்ந்த கவிதையின்மனம் முன்னையது; பின்னையது பூதசாஸ்திர ஆராய்ச்சியில் புக்கிருக்கும் மனமாம். தன் காதலியின் கண்களில் திகழ்கின்ற அழகினைப் பருகுமாறு உற்றுநோக்குகின்ற வோர் மகிழ்நன் செய்கை அவனையும் பெருமைசெய்து அவளாலும் விழையப்படும். அப்படிக்கின்றி, "நங்காய் நின் கண்களில் ஏதேனும் அழகு உளதோவென்று அறியும்பொருட்டே வாழ்கின்றேன். இதுகாறும் யான் கண்டது மிகச்சிறிது. இன்னும் சிறிது அறிய விரும்புகின்றேன். ஆகையால், சற்றே என்முகம் திரும்பு; உன் கண்களை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்" என்பானேல், அவன் காதலின்பயனை என்னென்றுரைப்பது. தன் காதலியை அவன் அப்பொழுதே இழந்தான். "இவ்வுலகின் அதிசயம்மிக்க பெரிய இரகசியத்தைப்பற்றி இப்பொழுது நாம் அறிந்திருப்பதினும் இன்னுஞ் சிறிது முயன்று அறியும்பொருட்டு உயிர்வாழ்வது உபயோகமுடையதேயாம்" என்னும் ஸர். வி. வி. இராமனுக்கும், அழகு உண்டோ என்று காணும்பொருட்டுத் தன்காதலியின்கண்களைத் தேடுகின்ற காதலனுக்கும் நெருங்கிய வோர் உறவு உளதென்று நினைக்கவேண்டி வருகின்றது.

எனின், இத்தகையவர், மத அநுஷ்டானங்களையும் சித்தாந்தங்களையும் பொருளுடையவைகளாய்க் கருதாமை யாதும் அதிசயம்அன்று. புத்தர் இயேசு கிறிஸ்து அனையவர்தம் போதனைகளையும் இன்னவர் எல்லையின்றி ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆயினும் இவர் எதனை எல்லையாக வைக்கின்றார் என்னுங் கருத்து ஐயமறத் தெளிந்திருக்கவில்லை. அவர் போதனைகளை அப்படியே எடுத்துக் கொள்ளலாகாதென்பர். அந்தப் போதனைகளின் சாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி எழுத்தெழுத்தாய் அவை ஏற்றுக்கொள்ளத் தகுந்தனவல்ல வென்பது அவ்வாசகத்தின் பொருளாவதை யாவரும் அறிவார். எனினும், எழுத்தளவே கொள்ளலாகாது என்னும் எண்ணம் நம்மை அவ்வெழுத்தின்எல்லைக்கும்அப்பாலும்கொண்டுசெல்லலாம், அல்லது அதனையே எட்டவொட்

டாமல் நெடுந்தூரம் பின்னேயும் நிறுத்திவிடலாம். "உன் ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மற்றொரு கன்னத்தையும் காட்டு' என்றார் ஏசுகிறிஸ்து. உனக்கொருவன் ஒரு தீங்கு செய்வானாயின் அதனைத் தடுத்துக்கொள்ளாமல்மேன்மேலும் அவன்உனக்குத்தீங்குசெய்யும்படி உன்னை இலக்காக்கிக்கொள் என்பது இப்போதனையின் கருத்து. அங்குள்ள சொற்களின் படிநடப்பதோ அல்லதுஅதனுள் அடங்கிய கருத்தின் படி நடப்பதோ என்னுங் கேள்வியே எழாமல், அப்போதனையும் அதனுள் அடங்கிய கருத்தும் ஒன்றே எனக்கொண்டொழுகுவார்உய்ந்தார்.அதுதான் மெய்யுணர்வின் தூய்மையும் வாழ்க்கையின்வீரமுமாகும். இவை யிரண்டும் இல்லாவிடத்தே, சான்றோர் சொல்லுக்கு எல்லை தேடவேண்டி நேரும். தலையிலடித்தால் அவனுக்குக் காட்டுதற்கு மறுதலை இல்லாமைபற்றி அடித்தவன் தலையை உடைத்துவிடுவது இயேசுகிறிஸ்துவின் வாசகத்தைக் கடந்ததாகாது, என்பது எத்துணை அவலமோ அத்துணை அவலமே, "மறு கன்னத்தைக் காட்டென்றால், காட்டி விடுவதா! அதனினும் அடித்துவிட்டானாயின் அப்புறம் என்னசெய்வது ! அதன்பின் காட்ட மூன்றாவது கன்னமில்லையே நமக்கு; ஆகையால், உனக்கொருவன் தீங்கு செய்தால், அதுபற்றி அவனுக்கு நீ மறுதீங்கு செய்யலாகாது" என்ற அளவிலேதான் இப்போதனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் ஆகுமென்பதை அறிந்து கொள்ளல் அருமையன்று. இதனைப்பற்றி G. K. செஸ்டர்டன் வரைந்துள்ள சிற்சில வாக்கியங்கள் பொருத்தமானவை. அவைகளை வேறோர் செவ்வியில் இவ்விதழ்களில் எடுத்து வரைந்திருக்கின்றோம் ஆனும், மீண்டுமிங்கு நினைவிற்கொள்ளுதல் நலம்—

'The work of Tolstoy represents the re-assertion of a certain awful common-sense which characterised the most extreme utterances of Christ. It is true that we cannot turn the cheek to the smiter; it is true that we cannot give the cloak to the robber; civilisation is too complicated, too vainglorious too emotional. The robber would brag, and we should blush; in other words, the robber and we are alike sentimentalists. The command of Christ is impossible, but it is not insane; it is rather sanity preached to a planet of lunatics. If the whole world was striken with a sense of humour it would find itself mechanically fulfilling the Sermon on the Mount. It is not the plain facts of the world which stand in the way of that consummation, but its passions of vanity and self-advertisement and morbid sensibility. It is true that we cannot turn the cheek to the smiter, and the sole and sufficient reason is that we have not the pluck."

ஆதலின் புத்தர் கிறிஸ்து அனைய மேன்மையோர் இயம்பியுள்ள போதனைகள் நம்முடைய புத்திபால் திருத்தியமைக்கப்பெற்ற பின்னரே போற்றற்கு உரியனவாகும் என்னக்கொள்ளுதல் ஏற்புடைத்தன்று. ஸர் ஸி. வி. இராமன், விரித்துரையாமலும் உதாரணங்கள் காட்டாமலும் விட்டிருக்கின்றார் ஆதலின் அப்போதனைகளுக்கு எப்பொருளில் எல்லையிட்டாரென்பதை ஊகித்தல் ஒரு சிறிது அருமையே. பிறர் நமக்குச் செய்கின்ற தீங்குகளை மேன்மேலுந் தாங்குவதல்லாமலும், அத்தீமை செய்தவர் அதனால்தீதுறுவார்களே என்று பரிகின்ற கடமையும் அவ்வாசகத்துள் உபலக்ஷணமாய் அடங்கி யிருக்கின்றதெனக் கொள்ளவேண்டுமென்பது அவர்தம் கருத்தாயின், எழுத்தளவே கொள்ளலாகா தென்னும் விதி உண்மையாய பெருமையடைகின்றது. அவர் வரைந்துள கடிதத்தின் போக்கினை முழுமையாக நோக்குங்கால் இந்தக் கருத்திற்கு இடங்கிடைக்கவில்லை யென்றே எண்ணவேண்டி நேர்வதால் திகைக்கின்றோம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[598-வது பக்கத் தொடர்ச்சி]

தோல்வியே துணிந்தது கம்பர்தம் கலைத்திறம்

"செவ்வியோய், யான் வானரமா மொரு விலங்கல்லாது மானுடவிதிகளுக்கே இலக்காதற் குரியனாயினுருக; மற்று, நீயோ,வெவ்விய புளினரென்ன விலங்கியே மறைந்து வில்லால் எவ்விய தென்னை" யென்று வாலி கேட்ட அக்கேள்விக்கு ஏழை இராமன் எங்ஙனம் எதிர்மாற்றம் உரைக்கவல்லான்! தன்னுடைய எளிமைபற்றி உண்ணின்று சுரக்கின்ற இளஞ்சிரிப்பு வெளித்தோன்றாவகை விழுங்கி விழுங்கிப் பொத்திய வாயினனாய் நின்றிருத்தல் வேண்டும். வாலியின் வாயடங்கப்பேசிய அப்பேச்செல்லாம்ஒருநொடியில் சிதைந்துவிட்டது. தான் வாயொன்றுசொல்லிக் கையொன்றுசெய்த இப்பிழையை ஒரு குரங்குந்தெரிந்து கேட்டபின்னர் என்ன செய்வான்? இராமனேமுன் வான்மீகத்தில், "ஏ மனிதனே, நீ விலங்காகையால் மறைந்துஉன்னை வேட்டையாடியது தகுதியேகாண்" என்று ஒரேமூச்சில் அழியாத முரண் உடைய இவ்விரண்டு நிலைகளையும் கலந்து பேசினானாயினும் அவ்வாலியோ அங்கு அதன் இயைபின்மையை அறிந்து கொள்ளமாட்டாமல் அடங்கிநிற்கலானான். அத்துணைப் பேதையாய்க் கம்பர் தன் வாலியை அமைக்கவில்லை. இராமன் தன்னை மனிதனென்றே வற்புறுத்தும்வரையில் அவனைத் தூண்டிப் பிறகு அவன்வாய்மொழியைச் செய்கைவகையினால் அழிக்கப்புகுந்த திறமையிது சாலப்பெரிது. "ஏ இராம, அசடன் நீ, ஏதோ முன்கோபத்தால், கொன்றுவிட்டனை. தகாதது வென்று யான் காட்டியது கண்டு, நான் மனிதனாதலின் தகும் என்று கூறுமிது பின்புத்தியேயன்றி வேறன்று. முன்னரே என்னை மனிதனென்று மதித்தவன் நீயாயின், மறைந்தெய்து இருக்கமாட்டாயன்றோ! என்னை எய்யுங்காலையில் என்னை விலங்கென்றே எண்ணினாய். உன் எண்ணம் இன்னதே யென்பதை அறிதற்கு உன் வாய்ச்சொல்லினும் உன்செய்கையே நம்பத்தகுந்தது. ஆதலின், என்னை விலங்கேயாக முத

விற் கருதி வந்தவனான நீ, தேமலர் மேலவன், மறைநெறிவந்த மணமில்லாமல், எய்தின் எய்தியதாக எம்மையியற்றிய தன்மையும் அறிந்திருத்தல் வேண்டும். அதற்குமாறாகப் பிழைசெய்து பழியே பூண்கின்றாய்; என்னைக் கொல்லும்போது குரங்கென்றே கொண்டு பிறகு மனிதனெனப் பேசுவது நீதியோ! அவ்வாறு பேசுவதும் முறைமையுமன்றே" என்ன வாலி எடுத்துக் கேட்குங்கால் இவ்விராகவன் தோல்வியால் வாயடங்கி நிற்கத்தானே வேண்டும். முதலிலே ஒன்றினை ஒருவகை பாவித்தவன் பிறகு அதனையே வேறுவகையாகக் கொண்டுவிட இயலாதென்னும் வழக்குமுறை விதியை ஆங்கிலத்தில் estoppel என்பர். வாலியும் அந்த முறையைப் பயின்றேதான் இராகவனை வாயடங்கும்படி செய்தனன். இவ்வாதத்தில் இராமனே தோற்றான்; இந்தத் தோல்விக்கே கம்பரும் இக் கிட்கிந்தா காண்டத்தின் முதலிலிருந்து வழிசெய்து வந்திருக்கின்றார். இதன் நுட்பத்தை உணர்ந்துகொள்வோமாயின் இவ்வுகலம்உய்வதற்கு இத்தோல்வியே பேருதவி செய்ததுமாகலாம். வான்மீகத்திற்போல், வாலிக்கு இராமன் இங்கும் தக்க அமைதி காட்டிவிட்டானென[illegible]க் கருதும்படி இந்நிகழ்ச்சி முடிந்திருக்குமாயின், வாலியின் வதை, இராமனுக்கன்றி இவ்வுலகிற்கும் வீணாகக் கழிந்திருக்கும். கம்பர் நூலிலோ வாலி தன் இன்னுயிரை வீணிற்கு விடவில்லை.

நன்று; வாயடங்கி நிற்கின்ற இராகவன் தன் தம்பியின் கண்களை எதிர்நோக்கவும் சாலக் கூசியிருத்தல் வேண்டும். "இப்பித்தாயவிலங்கின் ஒழுக்கினைப் பேசலாமோ" என்றுகூறி முன் இலக்குவன்றன் வாயினை அடக்கிய இராமனை, இப்பொழுது அவ்வாலி அதே சொற்களால் வாயடக்குகின்றதென்றால் அத் தம்பியின்முன் தன்மானம், பாவம், இவ்விராமனுக்குஇப்பொழுது என்னாம்! ஆயினும், சுமத்திரையின் பெருந்தகைப் புதல்வன் அவன், எளிமையுற்றுநின்ற தனது தமையனைக் காக்கும்பொருட்டு,

முன்புநின் றம்பி வந்து
சரண்புக முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று
செப்பினன் செருவி னீயு
அன்பினை யுயிருக் காகி
யடைக்கலம் யானு மென்றி
யென்பது கருதி யண்ணன்
மறைந்துநின் றெய்த தென்றான்.

[முதலில் உன் தம்பியாகிய சுக்கிரீவன் வந்து சரணம் அடைய, அப்பொழுது இராமன், நீதிமுறை ஒழுகாத உன்னைக்கொல்வதாக அவனுக்கு வாக்குத் தத்தஞ்செய்தான். பிறகு நீயும் போரில் உன் உயிரினிடத்தில் ஆசைவைத்தவனாகி, "நானும் உனக்கு அடைக்கலம்" என்று தஞ்சம் புகுவாய் என்பதை எண்ணியே, என் அண்ணன் உன்னை மறைந்து நின்று எய்தான் என்றான்.]

நொண்டிநொண்டி நடக்கின்றது பாவம், இலக்குவன் உரைத்த இக்காரணம்*. ஆயினும், இதனினும் வேறு என்னதான் சொல்ல இயலும்? முதலில் வந்து இரந்த சுக்கிரீவனுக்கு வாலியைத் தான் கொல்வதாக வரக்களித்துவிட்டபடியால், இப்படி மறைந்துநின்று எய்யவேண்டி நேர்ந்தது என்னுமிந்தக் கூற்று நகுதற்கொத்ததேயன்றி வேறு அன்று. இம்முறைப்படியே நோக்குங்கால் விபரிதம் சில தோன்றும். கிட்கிந்தை வந்தடைந்த இராமபிரானை முதலில், சுக்கிரீவனன்றி, வாலியே சந்திக்கநேர்ந்து, "பெரும, என்தம்பி சுக்கிரீவனை நான் பிலத்தின் வாயிலில் காவலாக வைத்து, மாயாவியைப் பொருதழிக்கப் புகுந்தக்கால், சுக்கிரீவன், நான் வெளிவராவகை அவ்வாயிலை மலைகளைக் கொண்டு அடைத்துவிட்டு என் அரசினைக் கைப்பற்றிக் கொண்டனன்; மீண்டுவந்த நான் அவ்வஞ்சகக் கள்வனை உயிர்வாங்கத் துரத்தியபோது அவன் ஓடிப் புக்கு இந்தஇருசியமூகபருவதத்தின்கண் அடைந்து ஒளிந்துகொண்டிருக்கின்றனன். மதங்கமுனிவன் இட்ட சாபத்தால் நானோ அங்குச் செல்லமாட்டாதவனாக இருக்கின்றேன். ஆதலின், என்பொருட்டு நீ ஏகி அவனைக்கொன்று என்பழியைத் தீர்த்தல்வேண்டும்' 'என்று இரந்துநிற்க, இராகவன் அவனுக்கு அவ்வரமருளி, அவ்வரைக்கண் பதுங்கிச்சென்று, மறைவிடமுற்றுநின்று சுக்கிரீவன்மருமத்துள் அம்பெய்து அவனை வீழ்த்தி, பிறகு, அவ்வாறு செய்ததற்குக் காரணமாக, "சுக்கிரீவ, உன் தமையன் முன்னரே என்னை வேண்டியபோது உன்னைக்கொல்வேன், என்று வாக்களித்துள்ளேன். நான்உன் எதிரே வந்தால், நீயும் உயிரில்ஆசைவைத்து என்னைத் தஞ்சமடைந்துவிடுவாயாயின், தஞ்சமடைந்த உன்னைக் கொல்லலாகாதென்னும் தருமமும், வாலிக்குக் கொடுத்தவாக்கை நான் நிறைவேற்றவேண்டும் என்னுந் தருமமும், மாறுபட நின்று என்னை மயங்கவைக்காவண்ணம் உன்னைநான் மறைவிடத்திருந்து எய்தேன் காண்" என்பானாயின் இவன்விதியை என் சொல்வது, அவன்மதியை என் சொல்வது! வாலிக்கு இப்பொழுது இலக்குவன்உரை செய்த கொள்கை இதனின் வேறாயதன்று.

ஆயினும், இத்துணை இத்துணை அறிவிலனோ இவ்விளையபெருமாள் இப்படி வாய்தந்தன கூறுவதற்கு, என்றாலோ, அதுவும்அன்று. இராமன்பால் வைத்ததோர் அன்பினால், அவனை எவ்வகையிலேனும் காத்தல்வேண்டும் என்னுமோர் ஆர்வம்பற்றி வழங்கியமுறைமையே இது. அன்றியும், இச்சொற்கள் இலக்குவன் நெஞ்சிற்கு முற்றிலும் வெளிநின்றே வந்திருத்தல் இயல்பு. இராமன் வாலியைக் கொல்லுவது நீதியன்றென்றே நினைத்தவன் இவன். இலக்குவன், இச்செய்கைக்குத் தனது சம்மததைத் தந்ததில்லை என்பதை முன்னரே கம்பர், வான்மீகத்திற்கும் மாறாக, காட்டியிருக்கின்றார். எனின், மனஞ்செல்லாமல் இவனொரு நொய்ய காரணம் காட்டும்படி கம்பர்பெருமான் நிகழ்த்திய இது இராமனது தோல்வியையே பின்னும் வலிவுசெய்து வற்புறுத்தும் பான்மையது. எனினும், இலக்குவனது இச் சொற்களைக் கேட்டவுடன் வாலி அந்தக் காரணம் தக்கதேயென்று கொண்டான்போல் அடுத்த பாசுரம் நிற்கின்றது—

கவிகுலத் தரசு மன்னன்
கட்டுரை மனத்துட் கொண்டான்
அவியுறு மனத்த னாகி
யறத்திற னழியச் செய்யான்
புவியிடை யண்ண லென்ப
தெண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
சென்னியை யிறைஞ்சிச் சொன்னான்

*** இலக்குவன் கூறிய இக்காரணம் பொருந்தமாட்டாமைபற்றி முன், 3 வது வால்யூம், 253, 254, 255 பக்கங்களில் விரிவாக வரையப்பெற்றிருக்கின்றது.**

[முன்னே,கேட்டு உணர்ந்திருக்கின்ற நூல்களின்கேள்விகளாகிய செல்வத்தையுடைய, குரங்கினத்து அரசனான வாலியும், இலக்குவன் சொன்ன கட்டுரையைத் தன் மனத்தினுட்கொண்டான். கொண்டு, இவ்வுலகில் பெருமையிற்சிறந்தவனான இராமன் தருமமார்க்கம் கெடும்படி செய்யமாட்டான் என்பது எண்ணி, அமைதியுற்ற மனத்தையுடையவனாகி,இராமபிரானைநோக்கித் தலைவணங்கிப் பின்வருமாறு கூறினான்]

என்று கூறிவிடுகின்றார் கம்பர். எனின், இலக்குவன் கூறியவற்றைக் கேட்டு வாலியே அது தக்கதென்று அமைந்தனனாக, பின்னர் நாம் அதன் அமைதியை அயிர்ப்பதெங்ஙனம் என நினைக்கலாம். வான்மீகத்தில் வாலியின் அவ் விறுதிக் கேள்வியும் இலக்குவனது இவ் வறியவிடையும் இல்லை. இராகவன் எடுத்துக்கூறியவைகளைக் கேட்டவளவிலேயே, வாலி,அவனிடத்தில் யாதும்பிழையில்லை எனத்தெளிந்து பின்வருமாறு அவனைப் பாராட்டிப் பேசினான் என்பார் வான்மீகிமுனிவர் —

“இவ்வாறு இராமர் சொல்லக்கேட்டவாலி தருமத்தையறிந்து, த்ன்னைப் பற்பலவாறாக நிந்தித்து, இராமரிடத்தில் யாதொருவிதமான தோஷமும் கண்டிலனாயினான். பிறகு அவ்வானரேந்திரன் தன்னிருகைகளையும் கூப்பிக்கொண்டு இராமரைநோக்கி “புருஷோத்தம,நீர்சொல்வது யாவும் உண்மையே; அதில் சந்தேகமில்லை. பெரியோர்களிடத்தில் சிறியவர் எதிர்மொழி கூறுவது தகாது. இராகவ, நான் இதற்குமுன்னே அறிவின்மையால் உம்மைக் குறித்துத் தகாதனவும் பிரியமில்லாதனவுமான சொற்களைச் சொன்னேன். அதற்காக என்னைக் குறைகூறவேண்டாம்.நீர் சகல தருமங்களையும் அறிந்தவர்; எப்பொழுதும் குடிகளுடைய நன்மையை நாடுபவர்; இது செய்யத்தகுந்தது, இது செய்யத்தகாதது என்பதைத் தெளிவாயுணர்ந்தவர். நான் தருமமார்க்கத்தைவிட்டு நீங்கிய ஒரு பெரும் பாபி. அறநெறியுணர்ந்தாய், எனுக்குத் தருமத்தை யுணர்த்தி என்னை நல்வழிப்படுத்திக் காப்பாற்றுவீராக” என்றான். மறுபடியும் அவ்வாலி கண்ணீர்விட்டுத் தொண்டையடைத்துக்கொள்ள மெல்லமெல்ல இராமரைப்பார்த்து “நான் இப்போது என்னைப்பற்றியும் என்மனைவி தாரையைப்பற்றியும்மற்றுமுள்ள என்பந்துக்களைப்பற்றியும்விசனப்படவில்லை; பொன்னாலாய அங்கதங்களை யணிந்த நற்குணங்களையுடைய எனது புத்திரன் அங்கதனைக் குறித்தே விசனப்படுகின்றேன்.அவன் குழந்தைப்பருவம்முதல் என்னைப்பிரியாமலே என்னிடம் மிகச்செல்வமாக வளர்ந்தவன். இன்று என்னைப்பிரியும் துயரத்தால் அவன் யானையுண்ட சுனைவரண்டுபோவதுபோல் இளைத்துப்போவான். அவன் தாரையினிடத்து எனக்குப்பிறந்துள்ள ஒரேகுமாரன்; யாதும் அறியாப் பாலகன், ஆயினும் மகாபலவான்; அவனை நீர் காப்பாற்றவேண்டும். சுக்கிரீவனைப்போலவே அங்கதனையும் நீர்பாதுகாக்கவேண்டும்-அவர்களைக் கண்டிப்பதும், காப்பாற்றுவதும், காரியாகாரியங்களையறிந்து நடக்கச்செய்வதும் உம்முடையபொறுப்பாகும். அரசு, நீர் பரதலக்ஷ்மணரிடத்தில் அன்பு பாராட்டுவதைப் போலவே சுக்கிரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் அன்பு பாராட்டவேண்டும். குற்றமற்ற தாரையைச் சுக்கிரீவன் என் குற்றத்திற்காக அவமதிக்காதபடி நீர் செய்யவேண்டும். உம்முடைய கட்டளைகளைக் கேட்டு உம்முடைய மனத்தின்படி நடந்து, உம்முடைய அனுக்கிரகத்தைப் பெற்றவன் இவ்வுலகத்தில் இராச்சியத்தை யடைந்து பின்னர்ச் சுவர்க்கத்தையும் சம்பாதித்துக்கொள்ளுவான். உம்முடைய கையினால் மரணமடைய வேண்டுமென்றே, தாரை தடுக்கவும் கேளாமல், நான் என் தம்பியாகிய சுக்கிரீவனுடன் போர் புரிய வந்தேன்” என்று சொல்லி நிறுத்தினான். அப்பொழுது இராமர் நல்லறிவுபெற்றஅவ்வாலியை,சாதுக்களால் அங்கீகரிக்கப்படும் தருமசாரமானநன்மொழிகளால் சாந்தப்படுத்துபவராய் “வானர சிரேஷ்ட, இதில் நீர் தவறு செய்துவிட்டீரென்றாவது,நான்தான் தவறுசெய்துவிட்டேனென்றாவது எண்ணவேவேண்டாம்.உம்மைக்காட்டிலும் நாங்கள் தருமத்தை நன்றாக வாராய்ந்தறிந்தவர்கள். குற்றவாளிகளைத் தக்கபடி தண்டிப்பவரும், குற்றத்திற்குத் தக்கபடி தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளும் தருமநாசம் அடையார்கள். இனி, நீர்என்னால் சிக்ஷிக்கப்பட்டுப்பாபத்தினின்றும் நீங்கித் தருமத்தையறிந்து தருமமார்க்கத்தில் செல்லப்போகின்றீர். ஆதலால் உமது மனத்தில் சோகம், மோகம், பயம் முதலியவைகளை விட்டுவிடும். வானரபுங்கவ, விதியினால்வந்த இதனை விலக்க உம்மால்முடியாது. அங்கதன் உம்மால் வளர்க்கப்பட்டவாறுபோலவே என்னாலும் சுக்கிரீவனாலும் வளர்க்கப்படுவான், இதில் சந்தேகம்வேண்டாம்” என்றார். இவ்வாறு ராமர் கூறிய இனிய மொழிகளைவாலிகேட்டுப்பின் அவரைநோக்கி “நரேந்திர, இந்திரனுக்கொப்பான வலிமையுடையாய், உம்முடைய பாணம் பாய்ந்ததால் புத்திமயங்கி நான்உம்மைத் தூஷித்ததை மன்னித்து என்னை அனுக்கிரகிக்குமாறு வேண்டுகின்றேன்” என்றான்.

இராமன் சொன்னதைக் கேட்டு வாலி இவ்வாறு அடங்கிவிட்டானென்று வான்மீகி முனிவர் கூறியிருப்பினும், கம்பர் அதனை நம்பாமல், வாலி மேலும் வாதித்து இராமபிரானதுவாயை அடக்கியபின்னரே தானும்அடங்கினான்என்னும்படி ஏன் அமைத்தார்? இலக்குவன் சொன்ன அவ் வியைபில்லாக் காரணத்தை ஒவ்வியே இவ்வாலி தெளிந்தனன் என்பது ஒருவாற்றானும் பொருந்தாது. அத்துணை அறிவிலி யல்லன் இவ்வாலி. கட்டுக்கதை என்று பொருள்படும்படி இலக்குவன் இயம்பியதைக் ‘கட்டுரை’, என்றே கம்பர் அழைக்கின்றார்.அன்னவாறே அதனைப் படைத்துமொழிகிளவி யென்றே கவிகுலத்தரசும் “மனத்துட் கொண்டிருத்தல்” வேண்டும். இனி, இவர்களிடத்தில்பேசியோ யாதும்பயனில்லை என்றே அவியுறு மனத்தன் ஆயினான். இவ்வகையினால் சிறிது தாபம் நீங்கியதும், முன் இவன் தாரையிடம் கூறிய அந்த நம்பிக்கை மீண்டும் மனத்தின்கண் தோன்றிப் “புவியிடையண்ணல் அறத்திறன் அழியச்செய்யான்” என எண்ணலானான். முன்னே சீரியநற் பொருளுரைகள் கேட்டிருந்த ஒரு செவிச்செல்வ முடையவனாதலின் அதன்பயன் அனைத்தும் இப்பொழுது இவனுக்குப் பலிக்கின்றது. தன்முன் நிற்பவன் “தீர்த்தனென்று அறிந்ததோ அவன்தன்சிந்தையே!” அல்லாக்கால்இராமபிரானே அறிவித்தானோ? இரண்டுமே நிகழ்ந்தனவென்று எண்ணல்வேண்டும். ஈசுவரன் செய்கையாமிதுவென்றுநமதுஉள்ளம் உணரத்தலைப்படுகையிற்றான் ஈசுவரனும் தன்னைக் காட்டித்தந்து அவ்வுணர்வினை உறுதி செய்கின்றான். இந்த உயரிய உண்மையைப் புலப்படுத்துவதற்கே கம்பர் வாலியின் வதையைஇவ்வண்ணம் நிகழ்த்திக் காட்டினார். இது நிறைவேற, இராமன் தன் செய்கைக்கு அமைதி காட்டமாட்டாமல் விழிக்கவேண்டி முடிவது இன்றியமையாததே யாகின்றது. இலக்குவன் இங்ஙனம் இயைபிலாது இயம்புவதும்அத்திறத்தினைச்சார்ந்ததே.ஆதலின்“அவ்வுரை யமைமையைக்கேட்ட”என்றசெய்யுளும் அதனைஅடுத்த “முன்புநின் றம்பிவந்து” என்றசெய்யுளும் இத்தத்துவத்திற்கு ஆதாரங்களாகின்றன. §

§. ஆயினும், இவ்விரு செய்யுள்களும் அவசியமற்றன வென்றும், பிற்காலத்தவரால்பாடிச் சேர்க்கப்பட்ட வெள்

இராமன், வாலிவதை என்னும் இந்தக்காரியத்தை, மறைந்து நின்று எய்வது என்னும் வகையில் இயற்றுவதுஎன மனத்துட்கொண்டு அதனை அவ்வண்ணமே செய்துமுடித்துப் பிறகு அது மானுடதர்மத்தின்படி தக்கதே என்ன வாதித்துக் காட்டப் புகுகின்றான்; வாலியோ தக்கதன்றெனக்காட்டிவிடுகின்றான்: இதுதான் அந்தச்செய்கையினின்று விளைந்த விளைவு. வான்மீகத்திலும் கம்பர் நூலிலும் செய்த செய்கையும் செய்தவகையும் ஒன்றேயாயினும், விளைந்தவிளைவோ முற்றிலும் வேறாயிற்று என்பதை இங்கு நினைவிற் கொள்ளவேண்டும். அங்கு இராஜ தர்மத்தை இராகவன் தனக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டினான். இராஜதர்மம்என்பது சமயோசிதமானது. அதன்படி பீஷ்மன் தருமராஜனுக்கு எடுத்துஉபதேசித்ததுபோல, 'ஜயிக்க அபேக்ஷையோடுகூடின இராஜாக்களிடம் தர்மம் அதர்மம் இரண்டுந்தான் இருக்கும்'' என்பதை வடமொழிவாலி ஏற்றுக்கொண்டு, இராமன் அரசனுக்குரிய தருமப்படி அதர்மஞ்செய்தாலும் தான் குறைகூறலாகாது என்று சும்மாவிருந்துவிட்டனன். எல்லோர்க்கும் ஒக்கமுடிந்த முதலறத்திற் கொவ்வாததொன்று, இராஜதருமம் ஆபத்தருமம் போன்று செய்வோரையும் சந்தர்ப்பத்தையுஞ் சார்ந்து நிகழுங்கால், தருமம்ஆகிவிடலாம் என்னும் இக்கொள்கை வடநூலோர் முறைக்கே அமையுமாகையால் கம்பர் அதனைவிடுத்து, இராஜதர்மத்தைப்பற்றியோ யாதும் தன் இராமனைப் பேசவைக்காமல் மானுடப் பொது அறத்தையே ஆதாரமாகக் கொள்வதற்கு முயலவைத்தார். $ ஆயினும் சார்பறநினைவும் இதனில் கலந்திருக்குந் தன்மையை முற்றிலும் மறக்காதவர்ஆகியே வாலியோடு வாதம்செய்தஇராமனை இறுதியில் ''மனுநீதியான்'' என்று அழைத்து முடித்திருக்கின்றனர். மனுநீதி, முதலறத்தை மறுக்கவில்லையாயினுமதனைச் சில சார்பறங்களாக வகுத்தே உலகத்திற்கு வழங்கியுளது. சனகனது அவைக்கண் விசுவாமித்திரன் தயரதனை ''மனுவென்ற நீதியான்'' என்று முன் புகழ்ந்தபோது, அவ்வகரம் உடன்படுமெய் யன்று. மனு கூறியுள்ள சார்பறங்களுக் கள்ளாகாம லதனையுங்கடந்து ஒரு முதலறத்தையே கைக்கொண்ட மேன்மையன் தயரதன் என்னும் பொருள் ஏற்புடைத்து. அன்ன தயரதனுக்கு மைந்தனாய்ப் பிறந்த இவ்விராமன், மனுநீதியை அறிந்திருந்தாலும் அதனைத் தன்சார்பு வான்மீகத்திற்போல் நேர்முகமாக எடுத்துக்கூறி, ''நான் செய்த இந்த வொரு அதர்மமும் அம் மனுநீதியின்படி தருமமேதான் காண்'' என்று வாதிப்பதற்குக்கூசியது இயற்கையே. இதனை முன்னரே அறிந்து கூறியவொரு வாசகமேபோலத், ''தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ'' என்று வாலி தாரைக் கியம்பிய சொற்கள் ஒலிக்கின்றன.

அது எவ்வாறாயினும், சார்பற வாதத்தை விட்டு முதலறத்தையே துணையாக்கொண்டு வெல்லமுயன்ற இராமன் தோற்றுநின்றான்என்னுமந் நிலைமையேஇச் செவ்வியில் உற்றுநோக்குதற்கு உரியதாயமைந்திருக்கின்றது. இன்றியமையா இத்தோல்வியை எற்றுக்கு இங்கு விளைவித்தார் கம்பர்? அல்லது, வாலி விளம்பியவாறு இராமபிரான் மன்னற வேலியைப் படுத்தது எதுபற்றி? மனுநீதி சார்பறத்தைச் சாதிப்பதுபோல், 'மன்னறம்' என்பது அதற்கு எதிராய், ஒன்றையும் சாராமல் நிலைத்து நிற்கின்ற முதலறத்தைக் காட்டும். அறிந்தோ அறியாமலோ இராமனால் அம்மன்னறம் இப்பொழுது வீழ்த்தப் பெற்றது. வாலியினடத்தேயன்றி மன்னறத்தினின்றும் 'விலங்கியே' இராமன் எய்தனன் என்பது ஏற்பட்ட பின்னரே, அவ்வாலி ''புவியிடை அண்ணல் அறத்திறன் அழியச்செய்யா''னெனத்தேறினான் என்று கூறுகின்றவிது விபரீதத்திலும் விபரீதமாக இருக்கின்றதே! அப்புறமா வாலி சென்னியை இறைஞ்சி இராகவனைத் துதிக்கப் புகுகின்றான்! கம்பரின் கவிதை புரிகின்ற இந்த இந்திரஜாலம் வியப்பினது சிகரத்தை எளிதினெய்தி விளையாடுகின்றது. கடவுளைப்போல் கம்பரும் அலகிலா விளையாட்டுடையார்.

ளிப்பாட்டுகளென்றும் ஸ்ரீமான் V. V. ஸ்ரீனிவாசாச்சாரியார் கருதுகின்றார். கவிகுலத்தரசும் ''மன்னன்'' கட்டுரை என்று அடுத்த செய்யுளில் பதம்பிரித்து, 'மன்னன்' என்பது இராமனைத்தான் குறிக்கு மாகையால் அச்செய்யுள் 'இனையதாதலின்' என்று இராமன் முடிவாகக் கூறிய செய்யுளுடன்தான் நேர்த் தொடர்பு உடையது என்பார் அவர். இலக்குவனை க்ஷத்திரியன் என்ற பொருளில் மன்னன் எனக் கொள்ளவிரும்பாவிடத்து 'அன்னன்' என்னப் பிரிக்கலாமே. இவ்விடயங்கள், 6-வது வால்யூம், 11, 12, 13, 17, 18, 19 இதழ்களில் விரிவாக ஆராயப் பெற்றிருக்கின்றன.

$. சார்பறத்திற்கும் முதலறத்திற்கும் உள்ளவேற்றுமையும் இத்திறத்தில் கம்பர் கொண்ட கொள்கையும், இது பற்றி இவர் திருவள்ளுவரிலிருந்து வேறுபட்டவாறும், அனையவைகளெல்லாம், இதன்முன் மூன்றாவது வால்யூம், ஒன்று முதல் பதினான்குவரையிலுள்ள இதழ்களில் விரிவாக ஆராய்ந்து எழுதப்பெற்றிருக்கின்றன வாகையால் இங்கு அவ்விடயங்களைச் சில சொற்களால் குறித்துக்கொண்டுமட்டுமே போகின்றோம்.

தமிழ்ப்பாடம் 139.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[602-வது பக்கத் தொடர்ச்சி]

தமயந்தியின் பேரழகைக்கண்டு வியப்பெய்திப் பலபட அதனைத்தன்னுளே பாராட்டி மகிழ்ந்த நளன், இந்திரன் தந்த மந்திரத்தைவிட்டு அவள்காணத் தன் உருவொடும் நிற்கின்றான். தமயந்தியும் அவனைவிதுப்புற நோக்கி வியக்கின்றாள்.

படவர வல்குற் செவ்வாய்ப்
பனிமொழிக் கொடியன் னாளை
மடலவிழ் கமலப் போதின்
மடந்தையென் பதற்கு வெற்றிக்
கடகளி றென்ன நின்ற
காமரு காளை தன்னை
யிடையறா தினிது நோக்கி
யிமைப்புறு குறையுந் தீர்ந்தாள். 57

உரை:— படம் அரவு அல்குல் - பாம்பின் படத்தைப்போன்றிருக்கிற அல்குலையும், செவ்வாய்-சிவந்த வாயையும், பனிமொழி - குளிர்ந்த சொற்களையும் உடைய, கொடி அன்னாளை - பூங்கொடிபோன்ற தமயந்தியை, மடல் அவிழ்- இதழ்கள் அவிழ்ந்த, கமலம்.

போதின் - தாமரைமலரில் வீற்றிருக்கும், மடந்தை என்பதற்கு - இலக்குமியே என்று சொல்லுவதற்கு ஏற்க—

கடம் களிறு என்ன - மதம் பொழிகின்றயானையைப்போல், நின்ற - தன்எதிரில் வந்து நின்ற, காமரு காளை தன்னை - அழகுடைய காளைபோன்ற நளனை, இடை அறுத - இடைவிடாமல், இனிது நோக்கி - இனிமையாகப் பார்த்து, இமைப்புஉறு குறையும் தீர்ந்தாள் - கண்கொட்டுவதென்னும் அவ்வொரு குறையும் இல்லாதவளானாள்.

விரிவுரை:—எதிர்நின்ற நளவேந்தனது அழகால் கதிவப்பெற்ற தமயந்தியின் கண்கள் இமையாமல் அவனை இனிது நோக்கின, என்பது இச்செய்யுளின் பொருள். இலக்குமியே இத்தமயந்தியாம் என்று எல்லோரும் இயம்புவார். ஆனால் தேவதையாகிய இலக்குமிகண்ணைக் கொட்டமாட்டாளே, இந்தத்தமயந்தி இமைக்கின்றாளே என்னச் சிலர் ஐயுறலாம். ஆதலின் 'இமைக்கும் இலக்குமி' என்று தமயந்தியைச் சிறிது வேற்றுமைப்படுத்தியே கூறவேண்டியிருந்தது. இவ்வாறு இவளை இலக்குமியினின்று இமைக்குங் காரணத்தால் வேற்றுமைப் படுத்தவேண்டி நேர்வது ஓர் குறையேயாம். இப்பொழுது அவள் நாட்டியபார்வையொடு நளனை நெடிதுநோக்குந் தன்மையால் இமைக்காதவள் ஆகின்றாள். ஆதலால் அக்குறையுந் தீர்ந்து எல்லாப்படியாலுந் திருமகளே ஆகிவிட்டாள் அவள். இவ்வாறு கூறுவது தகுதியணியின்பாற் படும்.

இனி, நளனைக் கண்ட தமயந்தியும் அவள் தோழிமாரும் சிந்திக்கின்றவற்றைக் கவி ஐந்தாறு பாட்டுக்களிற் கூறுகின்றார். இவைகளில் ஒன்றே இப்பாடத்திற் காண்போம்.

மங்கையர் நிறையு நாணுங்
கவர்ந்திட வனப்பு வாய்ந்த
இங்கிவன் றன்னை ஞால
மின்புறப் படைத்தி லானேற்
றிங்களங் கண்ணி வேய்ந்த
செஞ்சடைக் கடவு ளெங்ஙன்
பைங்கழை மதனைக் கொன்ற
படுபழி தீரு மாறே. 58

உரை:—மங்கையர் - மாதர்களது, நிறையும் - மன உறுதியையும், நாணும் - நாணத்தையும், கவர்ந்திட - கவர்ந்துவிடும்படியான, வனப்பு வாய்ந்த - அழகுடைய, இவன் தன்னை - இப்புருடனை, ஞாலம் - இப்பூவுலகத்தார், இன்புஉற - கண்டு இன்பமடையும்படி, படைத்து இலானேல் - படைத்திருக்காவிட்டால், திங்கள் - சந்திரனையும், அம்கண்ணி - அழகிய கொன்றைமாலையையும், வேய்ந்த - சூடிய, செம் - சிவந்த, சடை - முடியையுடைய, கடவுள் - சிவபிரான், பை - பசுமையான, கழை - கரும்பை ஏந்திய, மதனை - மன்மதனை, கொன்ற - கொன்றுவிட்ட, படுபழி - கொடிய பழியை, தீருமாறு - தீர்த்துக்கொள்வது, எங்ஙன் - எப்படியியலும்.

விரிவுரை:—தன்னோடு எதிர்த்துப் போர்செய்யுந் திறன் இல்லாத மன்மதனைச் சிவபிரான் கொன்றது படுபழியாகும். இரும்புவில் அல்லாது கரும்புவில்லை ஏந்தியிருத்தலே மன்மதனது திறலின்மையைக் காட்டவில்லையோ? அவனைக் கொன்றதற்கு ஓர் ஈடு செய்யாவிடில் அப்படுபழி ஒருநாளுந் தீராது. அப்படி ஈடு செய்ய முயறன்தன்காரியந்தான் சிவபெருமான் இப்புருடனைப் படைத்ததுபோலும் எனத் தமயந்தி முதலாயினோர் ஊகிக்கின்றனர். மன்மதனுக்கே இணையான அழகு வாய்ந்தவன் இந்நளன் என்பது இதன் பொருளாம். இவ்விதம் ஒன்றினை ஊகிக்கப் புகுவதுபோல் மற்றொன்றின் தன்மையைப் பாராட்டுகின்றவொரு திறமையால்சிறக்கின்ற அணியை உய்த்துணர்வணிஎன்பர். இது வடமொழில் சம்பாவனாலங்காரம் எனப்படும். "உலோபிகளின்கைப்பொருள் உலகிடை உலவவேண்டுமென்ற நல்லெண்ணத்தாலோ நான்முகன் கள்வரையும் இக்கலிகாலத்தில் படைத்திருக்கின்றான்" என்பது இவ்வணிக்கு உதாரணமாகும்

கலைநிலாத் தவழுமாடக் கடிநகர் கடந்து போந்த[மிற்
சிலைவலாய் நீயிங் கெய்தச் சிறப்புடைப் புவனந் தம்
பொலிவிழந் திருந்த தெந்தப் புவனநீ பொருள தாக
நலனுறு புனித மாய தெப்பெயர் நவிற்று கென்றார்.

உரை:—கலை - கிரணங்களையுடைய, நிலா - சந்திரன், தவழும் - தவழ்கின்ற (அவ்வளவு உயரமான), மாடம் - மாடங்களையுடையதும், கடி - காவலையுடையதும் ஆன, நகர் - இந்நகரத்தை, கடந்து போந்த - கடந்துவந்துள்ள, சிலைவலாய் - வில்தொழிலில் வல்லவனே.

நீ இங்கு எய்த - நீ இங்கு வந்துவிட்டதால், சிறப்பு உடைப் புவனம் தம்மில் - சிறப்புடைய நாடுகளுக்குள்ளே, பொலிவு இழந்து இருந்தது - இப்பொழுது அழகும் ஒளியும் இழந்து கிடப்பது, எப்புவனம் - எந்த நாடு,—

நீ - உன்னையே, பொருளது ஆக - தான் குறிக்கும் பொருளாகப் பெற்றிருப்பதால், நலன்உறு - நன்மை வாய்ந்த, புனிதம் ஆயது - தூய்மையை அடைந்தது, எப்பெயர் - எந்தப் பெயர்,—

நவிற்றுக - சொல்க, என்றார் - என்று (தமயந்தியின் தோழியர்) வினவினர்.

விரிவுரை:—நளனை நோக்கி அவன் ஊரும் பேரும் வினவினர்களென்பது இந்தச்செய்யுளின் பொருள். ஆயினும் இவை நேர்முகமாகக் கேட்கப்பெறவில்லை. "நீ இங்கு வந்துவிட்டதால் பொலிவழிந்து கிடக்கும் நாடு எது" என்று கேட்கின்றனர். 'எவ்வூரை விட்டு வந்தாய்" எனக்கேட்டவாறு ஆகும் இது. அப்படியே, 'உன் பேர் யாது' என்னக் கேட்பதற்கு மாறாக, "நீ பொருளாயிருப்பதால் எப்பெயர் புனிதமாயிற்று" என்கின்றனர். ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல். நளனாகிய பொருளைக் குறிக்கின்றதால் பெருமையுந் தூய்மையும் எய்திய அப்பெயர்ச் சொல் யாதெனக் கேட்கின்றனர். இதனால், அறிய விழைந்தன நளனது ஊரும் பெயருமாக, அதனை விட்டு, பொலிவிழந்த நாட்டைத் தெரிந்து இரங்கவும், புனிதமடைந்தபெயரைத் தெரிந்து வாழ்த்தவும் வேண்டினார்போல் வாசகம் அமைந்திருக்குமிது பிறிதினவிற்சியணி, ஆகும்.

நளன் இனி, தமயந்தியை வதுவைகொள்ள விழைந்திருக்கும் இந்திரன் முதலிய தேவர்களுக்கு மணத் தூதாகத் தான் போந்தவாறு சொல்லித் தன் செய்தி செப்பலாகின்றான்.

ஐந்தரு நீழல் வேந்தன்
ஆர்காலிக் கிறைவன் வெய்ய
செந்தழற் கடவு டென்பாற்
றிசையுறை தருமனின்னோர்
பைந்தொடி நின்னை வேட்டுப்
படைமதன் பகழி பாயச்
சிந்தனை பிறிதாய் மாழ்கித்
தெருமர லெய்து கின்றார். 60

உரை:— பைந்தொடி - பசுமையான பொன்னாற் செய்த வளையல்களை அணிந்தவளே, ஐந்தரு - பஞ்ச தருக்களின், நீழல் - நிழலில் வீற்றிருக்கின்ற, வேந்தன்-அரசனாகிய இந்திரன், ஆர்கலிக்கு இறைவன் - கடலுக்குத் தலைவனான வருணன், வெய்ய - வெப்பமுடைய, செம் - சிவந்த, தழல் கடவுள் - அக்கினி தேவன், தென்பால் திசை உறை - தெற்குத் திசையிலிருக்கும், தருமன் - யமதர்ம ராஜன், இன்னோர் - ஆகிய இவர்கள், நின்னை-உன்னை, வேட்டு - விரும்பி, படை - சேனையையுடைய, மதன் - மன்மதனுடைய, பகழி - பாணங்கள், பாய - பாய்வதால், சிந்தனை - அவர் மனம், பிறிதாய் - வேறுபட்டு, மாழ்கி-கலங்கி, தெருமரல் - ஆசையால் நேரும் சஞ்சலத்தை, எய்துகின்றார் - அடைகின்றனர்.

இங்கிவர் தம்மை யாசைக்
கிறைவரென் றறைவ தெல்லாந்
தங்கிய திசையின் பேரால்
சாற்றிய மாற்ற மன்றே
கொங்கவிழ் குழையிற் றாவிக்
குமிழ்மிசை மறியும் வேற்க
ணங்கலுழ் மேனி யாய்நின்
னாசையால் வந்த தாமால். 61

உரை:— கொங்கு - வாசனை, அவிழ் - வீசுகின்ற, குழையில்-உன்னுடைய காதணியில், தாவி - பாய்ந்து, குமிழ்மிசை - குமிழம்பூவைப் போன்ற நின் மூக்கின் மீது, மறியும் - மீள்கின்ற, வேல் கண் - வேல்போன்ற கண்களையும், அம்-அழகு, கலுழ் - வழிகின்ற, மேனியாய் - வடிவையும் உடையவளே,

இங்கு - இப்பொழுது, இவர் தம்மை - இந்தத் தேவர்களை, ஆசைக்கு இறைவர் - ஆசைக்குத் தலைவர், என்று - என்று, அறைவதெல்லாம் - சொல்வதெல்லாம், தங்கிய - அவரவர் தங்கியுள்ள, திசையின் பேரால் - திக்குக்களின் பேரினால், சாற்றிய - சொல்லிய, மாற்றம் அன்று - வார்த்தை ஆகாது. (ஆயின், 'ஆசைக்கிறைவர்' என்ற பெயர் அவர்களுக்கு எதனால் வந்தது என்றாலோ —)

நின்ஆசையால்-உன்மீது அவர் வைத்துள்ள அதிக ஆசையினால், வந்தது ஆம் - அவர்களுக்கு அப்பெயர் வந்தது ஆகும். (ஆல்-அசை)

விரிவுரை:—சொற்றிறம் வாய்ந்ததேனும், தேவர்களைச் சிறிது பரிகசிப்பதுபோல் அமைந்துள்ள இவ் வாசகம் வள்ளல் நளனுக் கடுத்ததன்று. ஆசையென்னும் சொல்லிற்கு வேட்கை என்றும், திசை என்றும் இரண்டு பொருள்கள் உள. இந்திரன் வருணன் அக்கினி யமன் முதலிய இத் தேவர்கள் ஒவ்வொரு திசைக்குத் தலைவர்கள் ஆதலா லவர்களை "ஆசைக்கு இறைவர்" என்று இயம்புவதுஉண்டு. ஆனால் அவர்களுக்கு "ஆசைக்கிறைவர்" என்றபெயர் வந்திருப்பது இக்காரணத்தால் அன்றென்ன நளன் இங்கு மறுக்கின்றான். மறுத்து, தமயந்தியின்மீது அத்தேவர்கள் கொண்டுள்ள வேட்கைமிகுதியால் "ஆசைக்கிறைவர்" என்னும் பெயர் பெற்றனர் எனச் சாதிக்கின்றான். 'ஆசை' என்னுஞ்சொல்லிற்கு இரண்டுபொருள்களிருப்பதாலிப்படிக்கூறலாயிற்று. ஆயினும்இது இங்குச் சிலேடை ஆகாது. ஒரு சொல் அல்லது சொற்றொடர், இரண்டுமூன்றுபொருள்கள்படக் கூடியதாகுமானால், அவ்விரண்டு மூன்று பொருள்களும் ஒருங்கே பயன்படும்படி பயில்வது சிலேடை. இதன் இலக்கணத்தை முன் (6—590) இதழ்களில் விரிவாக விளக்கியிருக்கின்றோம். "துறவிகளும் மூங்கில்களும் கிளைவிட்ட வேங்கடமே"— என்னுங்கால், 'கிளைவிட்ட' என்பதற்கு உரிய, "உறவினரை விட்டுவிடல்", "கிளைகளை வளரவீடுதல்" என்னும் இரண்டுபொருள்களும்ஒருங்கே உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்படியே "கலைமதி மருட்டும் முகத்தாள்" என்பதில், "கல்வி நிறைந்த புத்தியையுடைய ஆடவர்களையும் மயக்கும் முகத்தை யுடையவள்" என்கின்ற பொருளும், 'கிரணங்கள் நிறைந்த சந்திரனையும் புறங்காட்டியோடும்படி செய்யும் அழகு வாய்ந்த முகத்தையுடையவள்" என்னும் பொருளும் ஆகிய இரண்டும் பொருந்தும்படி அமைத்துப் பயிலப்பெற்றிருக்கின்றன. ஆதலின் ஒருசொல் அல்லது சொற்றொடர்க்குரியபலபொருள்களும் ஒருங்கே போருந்தும்படி பயில்வது சிலேடை.

இச்செய்யுளில் "ஆசைக்கிறைவர்" என்பது அவ்வாறு பயிலப்பெறவில்லை. அத்தொடர்க்குரிய இரண்டு பொருள்களில் ஒன்றினை மறுத்து மற்றொன்றைச் சாதிக்கின்றார் கவி. இவ்வகையில்சிலேடையிலிருந்து வேறுபட்டிருக்கும் இவ்வணிக்குப் பிரிநிலை நவிற்சியணி என்பது பெயர். இது வடமொழியில் நிருக்தியலங்காரம் என்று அழைக்கப்படும். "அலர்" என்பதற்கு மலர் என்றும், பழிச்சொல் என்றும், இரண்டு பொருள்கள் உள. மலர்மேல் வீற்றிருப்பதால் பிரமனுக்கு 'அலரவன்' என்னும் பெயர் வந்தது. ஆனால் அவனைப் பார்த்து, "நான்முகனே, நீ பாபிகளையும் மூடர்களையும் படைக்கின்ற பழியைச் சுமத்தலால் அன்றோ உன்னை உலகத்தார் 'அலவரன்' என அழைக்கின்றனர்", என்பது இப் பிரிநிலைநவிற்சி யணியாம்.

"அம்கலுழ் மேனியாய்"—அழகு வழிகின்ற உருவமுடையவளே என்பது பொருள். வழிகின்றஅழகு என்பதால் அதன்மிகுதி காட்டப்பெற்றிருக்கின்றது. "உன் மூஞ்சியில் அழகு வழிகின்றது போ" என்று கூறும் வஞ்சனைவழக்கு இதுபற்றியே போலும்.

கொங்கவிழ் குழையிற் றாவிக் குமிழ்மிசை மறியும் வேற்கண்—காதிற்கும் மூக்கிற்கும் இடையே புரள்கின்ற நீண்ட கண்கள் என்பது பொருளாம். குழை

யென்பது காதணி. ஆனால், வாசனை வீசுகின்ற குழை எனக் கூறப்பட்டிருப்பதால், நந்தனவனத்திலிருந்து வந்த தமயந்தி மலர்களைப்பறித்துக் காதுகளில் குழைபோல் நாலவிட்டிருந்தனள் என்னக் கருதவேண்டும். குமிழ் என்பது குமிழம்பூவைப் போன்ற மூக்கினைக் குறிக்கின்ற உவமை ஆகுபெயர். கொங்கவிழ் மலர்க் குழையிலிருந்து குமிழம்பூவிற்குப்பாய்கின்றகண்களை வண்டென உவமிப்பது பொருந்தும். அவ்வாறு உவமை கூறத்தான் நளன் ஆரம்பித்திருக்கலாம். ஆனால் அவளது அழகினால் அவசமுற்ற அவன்மனம் தன்னிலை நில்லாது, வண்டுபோன்ற கண் என்னாமல் 'வேல்போன்ற கண்' என அவ்வுவமையை மாற்றிவிட்டது மேலும் அவளுடைய பார்வையும் அவன்மீது அப்பொழுது தைத்திருக்கும். ஆயினும், வேலோ, மலருக்கும் மலருக்கும் மறித்துப் பாயாது. இன்னபடி உவமையை அல்லது உருவகத்தை ஒன்றாகத் துவக்கி வேறொன்றாக முடிப்பதை ஆங்கிலத்தில் confused simile, confused metaphor என்று கூறுவார். இதற்கு நேரான தமிழ்த்தொடர் இல்லையாகையால் நாம் மருளுவமை அல்லது மருளுருவகம் என அழைப்பின் அது ஒருவாறு பொருந்துமென்று நினைக்கின்றோம்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[604-வது பக்கத் தொடர்ச்சி]

2. இதிகாசக் கதை யாதும் தீயோர் சரிதையன்று

கந்தபுராணத்தில் காணப்படுகின்ற சூரபன்மனும், இராமாயணத்தில் காட்டப்பட்ட இராவணனும், முறைப்படி நோக்குமளவில் காவியக் கதாநாயகரென்றும், தந்நிகரில்லாத் தலைவரென்றும் நாம் மொழியினும் விபரீதமாகாது. கச்சியப்ப சிவாசாரியரும் கம்பரும் இவரைக் கறுப்பு வொளியில் காட்டினும், சூரபன்மன் வதைக்கப்பட்டதும் இராவணன் வீழ்த்தப்பட்டதும் நமக்கு ஒருவகைப் பச்சாதாபத்தையே விளைவிக்கின்றது. அத்துணைப் பெரும் பதவியில் இருந்தோர் இன்னவாறு முடிந்தனரே யென்னும் இரக்கம் வருகின்றதேயன்றி, தீயவர்கள் ஒழிந்தனரென்னும் சந்தோஷத்தை யுண்டாக்கவில்லை. ஆதலால் இவ் விராக்கதத்தலைவர்கள் செய்த குற்றம் ஒருவாறுமறையும்படி இவர் தண்டனைபெற்ற காலத்தில் அவரை மறைத்திருந்த கரும்புகை நீங்கியவளவில் செவ்வனே அவர் உண்மையழகைக் காண்கின்றோம். கண்டதும் ஏன் இவர் குற்றத்துக்கு ஆளாகவேண்டுமென்கிற பரிவு எழுகின்றது. இவர்களின் செம்மை, மேன்மை வீரம் முதலிய நற்குணங்கள் விளங்குகின்றன.

மேற்கண்ட இதிகாசங்களில் காட்டப்பட்டுள்ள அரக்கத் தலைவர்கள் (ஆங்கிலத்தில் காட்டப்படும் Tragic heroes—மரிக்கும் கதாநாயகர்கள் போல்) ஒருகுற்றத்தாலழிந்த பேரறிவும் போற்றலுமுடையோர். அக்குற்றத்தைச்செய்யாதிருப்பினுஞ்சரி, அதுகளையப்பட்டிருப்பினுஞ் சரி, இவர்களோ மற்றும் பலகாலம் வாழ்ந்திருப்பார். ஆகையால் குற்றங்களின் கொடுமையைக் காட்ட இதிகாசங்கள் ஏற்பட்டனவேயன்றி, கொடியோர் சொற்களையும் கொடியோர் காதையையும் உணர்த்த வந்தவனல்ல. ஆகையால் கந்தபுராணத்தில்சூரபத்மன்முதலானோர் மாயையிற் கட்டுப்படாமல், அதாவது மாயையுபதேசத்தின் வண்ணம் தவஞ்செய்யாது, நிஷ்காமியமான தவத்தின்கண் இறங்கி யிருப்பாராகில் நிரதிசய ஆநந்தத்தைப் பெற்றிருப்பர். ஆயினும் தவத்தின் பயன் பலகாலம் அவருக்கு உலகஇன்பந்தந்தது. மற்றும் "மறவாதுகல்லெறிந்த" சாக்கியநாயனார்போல், சிலகாலம் மாயனிடம் மறவாப் பகைபெற்ற சிசுபாலன்போல், இராமனைப் பகைத்தஇராவணனும் பரமபதத்திற்கு அருகனானான்.

துரியோதனனும் நற்குணங்கள் வாய்ந்தவனென்பதற்குத் தடையில்லை. சகுனிமாமன் வசம் அவன் மனம் திரும்பாமல் நின்றிருக்குமாயின் பழிச்சொற்களுக்குஆளாயிரான். இவனுக்குங்கர்ணனுக்குமிடையேயுண்டாயிருந்த நட்பு யாவரும் வியக்கத்தக்கதன்றோ? சகுனியும், துரியோதனன் முன்னேற்றத்தைக் கருதினானேயன்றிஅத்துணைச் சுயநலம் கருதினானெனக் கூறுதல் அரிதாயிருக்கின்றது. இவனது சேர்க்கையால் துரியோதனனுக்கு இயற்கையிலிருந்த பால் போன்றமனம் தயிராய், பிறகு புளித்து,மூத்துத் துர்நாற்றம் பெறுவதாயிற்று. இந்தச் சகுனி அஸ்தினாபுரத்தில் கால்வைக்காமல் இருந்தானாயின்பாண்டவ கௌரவயுத்தம் வருவதற்கே இடமில்லை. இத்தகையோனும் முற்றும் துஷ்டனென்று கூறுவது தகாது. துச்சாதனனோ அண்ணனது கட்டளை யொன்றைப் பன்மடங்கு வலிவுடன் செய்தனனே யன்றிச் சுயநலத்தைக் கருதி யாதுஞ் செய்ததாகக் காணப்படவில்லை. சயந்தன் முதலானோர் செய்த குற்றங்கள் சாதாரணமாய் மனிதர்கள் செய்யக்கூடிய பிழைகளேயன்றிக் கொடுமையே வடிவெடுத்தோர் செய்கைகள் அல்ல.

பாரதவீரராகிய பீஷ்மர், துரோணர், சல்லியன், அச்வத்தாமன் முதலியோரை நாம் நோக்குங்கால். இவர்கள் புண்ணியபுருடராய்க் காணப்படுகின்றனர். தந்தையின் இன்பத்தையேகருதி நித்தியப் பிரமசாரியாய் எண்ணூறு வருடம் உயிருடன் இருந்தவரும் மச்சகந்தியினது சந்ததியோருக்கு நன்மையே யுண்டாக உழைத்தவருமான காங்கேயர், அஸ்தினாபுர அரண்மனையில்வசித்தாலும்,உண்மையிற்பெருந்தவசியேயாம். விராடபுரத்தில் ஆனிரை மீட்சியில் அருச்சுனன் விட்ட மோகனாஸ்திரம் இவர் ஒருவரையே மயக்கச் சக்தியற்றதா யிருந்தது. வருங்கால விஷயங்களை இவர் நன்குணர்ந்தவர். துரியோதனன் பக்கத்தில் போர்செய்தாலும் பட்சபாதமில்லாதவர். ஐம்புலன்களை வென்றவர். அறநெறி வழுவாதவர். வீராதிவீரர். துரோணரோ நியோகியான விப்பிரர். அதர்வணவேதத்தையும்கரைகண்டவர். சிவபெருமானைத்

தனது இல்லத்தில் அதிதியாக வெழுந்தருளப்பெற்றவர். அவர் குமாரனான அஸ்வத்தாமனும் அவ்வாறே. இனிவருஞ் சதுர்யுகத்தில் வேதவியாசராகப்போகும் கல்வியினும் கலையினும் மிக்கவொரு பெரியார். 18-ம் நாள் பாரதயுத்த இரவில் பாசறையில் இவர் செய்த மறப்போரை நாம் ஒருவாறு மறக்க வேண்டியதே. பூபாரம் நீக்க அவதரித்த மாயனது சக்தியால் அவர் மயங்கினரேயன்றிப் பாண்டவர் மீதேனும், வேறு யாவர் மீதேனும் துவேஷம் கொண்டவரல்லர். இவர் செய்கை ஊழ்வினையென வருந்தற்பாலதன்றி, நினைந்துசெய்த அடாதகாரியமென யாம் முனியலாகாது. இவ்வாறே பாரதத்தில் ஒவ்வொரு வீரரின் செய்கையையும் எடுத்துநோக்கினும் வியக்கத்தக்கதாய் இருப்பதன்றி வெறுக்கத்தக்கதாய்க் காணப்படவில்லை.

சூளாமணி

[603-வது பக்கத்தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்

12. ('வரையின்மேன்மதி'எனப் பாடங்கொள்க) மேற்சொல்லிய வெள்ளிமலையின் மேலே, அழகியதாயும் மிக்க ஒளியுடையதாயும் திகழ்கிற சேடி எனப்பெறும் இவ் விஞ்சையர்நாட்டின் தென்புறத்திலே, மூங்கிலின்மீதே பிறை வந்து தவழ்தலான் இயற்கையாலேயே அழகு பெற்று நிலைநின்ற இரதநூபுரச் சக்கரவாளம்என்று புகழப்பெறுகின்ற பொன்னகர் ஒன்று உள்ளது. (மூங்கிலின்மீது பிறைக்கோடு இடிதாங்கிபோலத் தொலைவில் காட்சிதருவது காண்மின்)

13. அழகிய பொன்மாலைகள் தூக்கப்பெற்றிருக்கும்களியாட்டிடத்திலே,வாழைகள்எழுந்து விளங்குகின்றன. காதற்குடியால் செக்கச்சிவந்த வாயினையுடைய பெண்கள் அம்மரங்களினருகே கொம்பென ஒசிந்து கணவருடன் இயைந்து இயங்குகின்றனர். அந்தநிலையுயிம் இயற்கையோடியைந்த பொருத்தத்தினை மறவாதவராகி மரங்களுக்கு முத்தன்ன நீர்ஊற்றுவா ராகின்றனர். (கொப்புளிக்கின்றனர் என்றும் அதனால் வாழை மலர்கின்றது என்றும் கூறுவாரும் உளர்). அம் முத்தநீர் அவ்வாழையின் வழுவழுத்த அடிமரம் நிறையத் ததும்புகின்றது.கிளிச்சிறை என்னும் பைம்பொன்னாற் செய்தனபோலத் திகழ்கின்ற அவ்வாழைகள் செம்பொற்பழங்களைப் பழுத்து நிற்கின்றன. அப்பழங்களின் ஒளி, சுற்றிலும் பரவுகின்றது. காற்று அடிக்குந்தோறும் அப்பழங்கள் நைந்து போவதால் அவற்றின்நின்றும் சாறு மணத்தோடே எங்கும் பாய்வதேபோன்று உள்ளது அவ்வொளி. பொன்னரிமாலையின் நிழலிலே,-கொழுகொம்பன்ன கொழுநர்மேற் சாரும் கொம்பன்ன மகளிர் - காதற்குடியால் களித்திருக்குமிடத்தே, முத்தன்ன தெண்ணீரை அன்புடனே ஊற்றி வளர்க்க, அந்நீர் ஊறிக் கொழுத்த அடியோடு விளங்குகின்ற அவ்வாழைகள் செம்பொன்னேபழுத்துத் திருமணமேவீசித் தேனினுமினிய சாற்றை எங்கும் பாய்ச்சுவதுபோல்,தோன்றுவோ, அம்மரங்கள். நாமும் அங்கே அன்னவாறு ஆகாமோ! இவற்றை வெறுஞ் சொற்கள் என்னப்போமோ ? விஞ்சையர்உலகில் காதலோடு அன்பும், இயற்கையொடுசெல்வமும், இவ்வாறியைந்திருப்பதனைத் தோலாமொழித்தேவர் இரண்டொரு சொற்களாம் சொக்குப்பொடியிட்டு நம்மைமயக்கி நம்பவைக்கின்றார் அன்றோ.நம்முலகம் விஞ்சையருலகம் ஆவதித்தகைய காட்சியின் வேறுபாட்டினாலேயே யாம். அங்கும் வாழை இங்கும் வாழை. அங்கே அன்பில் எழுந்தவாழை;இங்கே உழைப்பில் எழுந்த வாழை. அங்குள்ள வாழை பொன்மரமாகிக் கற்பகமாகிறது. இங்குள்ளவாழை செப்புக்காசளவாகிக் கெடுகிறது. இந் நோக்கவேறுபாட்டிலேயே உலகவேறுபாட்டை அமைத்துக்காட்டும் பாவலரின் பெருமையை என் என்பது !

14. ஓர்அழகிய வீட்டிலே நல்லதொன்று நடக்குமே யானால்;புறத்தே வாயிலின்கண் வாழையும் கமுகும் கட்டிவைத்திருக்கக் காண்கின்றோம். இவ் விரதநூபுரத்தே என்றும் நல்லதே நிகழ்தலினால் வாயிலிலே வாழையுங் கமுகும் இயற்கையாகவே வளர்ந்து திகழ்கின்றன. வாழையைக் கண்டோம். இனிக் கமுகைக் காட்டுகின்றார் தோலாமொழித்தேவர். மேலே கமுகந்தோடுகளால் வேய்ந்ததோர்இடம், நிழல்மிக்க இடம், இதனைக்காண்மின். நிலா விளங்குவதுபோல ஒளிரும் வெள்ளி விம்மிக்கொண்டு வெளி வருவது போலப் பாளைகள்பல பிளந்துநின்று மிளிர்கின்றன. அவற்றிலே சிற்சில பச்சைக் காய்களாய்க் காய்ப்பன சுற்றிலும் ஒளி வீசும் பச்சைநிறக்கதிர்களான் சிறந்த பெரிய பச்சைக் கற்களே போல ஒளிர்ந்து குலைகுலையாய்த் தொங்குகின்றன. அவற்றில் வேறுசிலவோ, திரட்டிவைத்தனபோலச் செம்பழமாய்ப் பழுத்துத் தொலைவிலும் ஒளிவிட்டு மின்னிச் செம்பொற்றிரட்சிகளாய் விளங்குகின்றன. கமுகந் தோட்டம் இவ்வாறு பலவகை ஒளிகளும்கொண்டு மின்னிக் காற்றிலசைவது ஒளியேவடிவாய் எங்கும்பரந்து கீழ்மேல்வீழ்வதே போன்று தோன்றுகின்றது.

15. விஞ்சையருலகைப்பொன்கொண்டும்மணிகொண்டும்புனையாமல்இவ்வாறுஇயற்கையேவடிவமாகப் புனைவதை மேலும் காட்டுகின்றார் தோலாமொழித்தேவர், அந்நகரில் உள்ள மாடங்கள் எத்தகையன ? அவை, ஒளியானது நிலைபெற்று விளங்கும் கற்பகமரத்தின் நிழலில் அமர்ந்துள்ளன. கற்பகமே மேனிலைமாடமாக அமைகின்றது. அதற்குள்ளே எங்கும் பரந்து எரிபரந் தொளிர்வது போல, உள்ளே பாரிசாதங்கள் அழகு செய்கின்றன. கற்பகங்கொண்டு புறத்தே வேய்ந்து பாரிசாதங்கொண்டு அகத்தே வேய்ந்துள்ளார்கள் எனலாம். இனிச் சுற்றிலும் புறத்தே சுவரிட்டாற்போல எரிமரங்கள் மின்னிப் பொலிகின்றன. இக்காட்சி எத்தகையது. கற்பகம் பொன்மரமன்றோ;ஆதலின் அஃதே செம்பொன் மாடமாகும்.

பாரிசாதத்தின் ஒளியோ அம்மாடவாயில் அழகுறப் பொலிவதுபோலத் தோன்றுகிறது. அவ்வழி முழுவதிலும் பலநூறு கதிரவன்களையே விளக்காக ஏற்றி வைத்ததனால் அவ்வழியே நம் கண்ணைப் பிடுங்கிக் கொண்டு போவதுபோல் ஒளி வடிவாய் எரிவதுபோலிவ் வெரிமரத்தின் ஒளி எங்கும் பாய்கின்றது. ஈதே நாம் அங்குக் காணும் செம்பொன் மாடம்.

16. குற்றமற்ற மாலை - அழகாலும் மணத்தாலும் மேன்மையாலும் குளிர்த்தியாலும் தூய்மையாலும் மிக்க மாலை - மணந்த மங்கையர் தோளன்றிப் பிறர் தோளிலே படாத மாலை - இத்தகைய மாலையணிந்த ஆடவர்களோடு பெண்கள் கூடித்திளைத்து மகிழ்கின்றனர். அவர்கள் பூசிய சாந்தம் கலைகிறது, கீழே வழிகிறது, வேர்வையும் அதனோடு அரும்புகிறது. தென்றற் காற்று இவர்களை இளைப்பாற்றுவது போல மெல்ல வீசுகிறது. வேர்வை மறைய அங்கு வழிந்த சாந்தைப் புலர்த்துகின்றது அத்தென்றல். அவர்களுக்கு நன்மை செய்ததனால் தானும் ஓர் நன்மை பெறுகின்றது அக்காற்று. இயற்கையில் இயைந்து விளங்கும் பொருத்தம் அத்தகைய தாகும். புலர்த்தியதன் பயனாக இக்காற்று அச்சாந்தின் நறுமணத்தைப் பெறுகின்றது. மெல்ல வீசும் காற்று நறுமண மிக்க காற்றும் ஆகின்றது. இம்மணத்தை உணர்ந்த வண்டுகள் இசைபாடத் தொடங்குகின்றன. வெள்ளி வடிவான லோத்திர மரங்கள் நிறைந்துள பொதும்பரில் புக்குக் குளிர்த்தியும் பெற்று, இசையொடும் மணத்தொடும், மெல்ல வந்து மேற்கூறிய மாடத்தினுள்ளே வீசுகின்றது. இனிய வாழைப் பழங்கள்; தேனொழுகி மெலியும் திருப்பூக்கள்; கண்ணுக்கினிய கமுகந்தோட்டம்: கண்டோர் திகைக்குறும் கற்பகமாடம், இசையோடு இயைந்த இன்மணக் காற்று—இந்தப் புறத்தழகுக்குள்ளே இன்பவன்பு அகத்தழகாய்ப் பொங்கி வழிகின்றது.

17. எல்லாம்மரங்களே. அவற்றினழகே அங்கு அழகு. பச்சிலை மரங்களின்பூங்கொத்துக்களும், அசோக மரத்தின் தளிர்களும் ஒன்றாய்ச்சிக்கிப் புதியதொரு பூங்கொத்தாய் அசைகின்றன. இலைகளின் இடையே மலர்ந்த பெரிய மாம்பூங் கொத்துக்கள் பூம்பந்தரிட்டாற்போல ஒளிர்கின்றன. தேனொழுகும் பூங்கொத்துக்களையுடைய தேவதார மரங்களின்மேலே அம் மாம்பூப் பந்தர் ஊன்றுகிறது. தேவதாரம் அச்சுமையால் நலிந்து ஒல்கி அசைகின்றது. இவ்வாறு பூக்களாற் பொலிகின்றது அந்நகரம்.

18. இவ்விஞ்சையருலகின்இன்ப நுட்பத்தை மேலே விளக்குகின்றார் தோலாமொழித்தேவர். நம்முலகில் உள்ளனவே அங்கும் உள்ளன. கடவுளாறும் கங்கை - காந்தள் பூத்த மலை - தேன் கசிந்தொழுகும் பூக்களால் பொலிதரும் பொழில்கள் - கடலினருகே முத்தைக் குவித்தாற் போன்ற நீண்ட மணற்குன்று,- முல்லைப் பந்தர் - இவைதாம் நம்முலகிலும் உள்ளனவேயாம். ஆனால் இங்கே அவை துன்பம் கூத்தாடும் இடமாக விளங்குகின்றன. ஆனால் அங்கே இவை போன்ற இடங்கள் இன்பத்தை ஆக்கி வளர்க்கின்றன. ஆதலின் அந்நகரத்தில் காதற்றுன்பமேயன்றி வேறொரு துன்பமு மில்லையாம்.

இவ்வாறு விஞ்சையருலகினைப் புனைந்துரைக்கின்றார் தோலாமொழித்தேவர். இவ்வாறு புனைந்துரைத்தார் வேறொருவரும் இல்லை என்றே நாம் கூறலாம். மெல்ல நம்மை உடனழைத்து முதலிருந்து முடிவு வரையும் காட்டி அதன் நுட்பத்தையும் விளக்கிவைத்துள்ளார். கருத்தின் ஆழத்தாலும் புதுமையாலும் பொருள்செய்வதில் அருமை சிறிது உளது என்பது உண்மை யாகலாம். ஆனால் இவற்றை வெறுஞ்சொற்கள் என்றோ, கருத்தளவில் யாது மில்லை என்றோ, சுவையில்லா அடைமொழிகளுக்கு இவையே எடுத்துக்காட்டுக்கள் என்றோ, புனைந்துரைக்க வேண்டுமேயெனத் தன்கடமையைக்கழித்தாற்போலப்பாடிவிட்டார் என்றோ, கருத்துமுற்றத் தோய்ந்த உவகையால் எழுந்தவை இவை யல்லஎன்றோ, மோனைக்கும் எதுகைக்கும் மிகவுமுயன்று பொருளும் முடிவும் சேரவோ சேராதோ பாடிவிட்டார் என்றோ ஒருபெரியார் இவற்றைப்புறக்கணித்ததுபோலப் புறக்கணித்துவிட முடியுமோ! சூளாமணியின் பாட்டின்பத்தில் தோய்ந்தோர் மோனைக்கும் எதுகைக்கும் தோலாமொழித் தேவர் வருந்துகின்றார் எனக்கூறவே முன்வர மாட்டார்கள். நன்கு சாணைதீற்றப்பெற்றமணிகளாய் இன்னொலியும் பெற்று இசைப்பாட்டாய் எழுவனவே சூளாமணிப் பாடல்கள் எனலாம். இங்கே கல்லும் புல்லும் நெல்லும் ஆயவேண்டுவ தில்லை. இத்தகைய இன்னொலி வெள்ளம் வேறிடத்தே காண்பது அருமை. சுவையில்லா அடைமொழி வருவதாக எடுத்துக் காட்டக்கூடிய "ஆந்துணர்த் தமாலமு மசோகபல்லவங்களுந் தாம்துணர்ந் தசைந்தன" என்பதை எடுத்துக் கொள்வோம். பூவின் பெருக்கத்தைக் குறிக்கவந்தபுலவர் அப்பூங்கொத்துக்கள் மேலும் மேலும்வளர்ந்து கொண்டுவருகின்றன என்பதைச்சுட்ட உயிர்நிலையாகிய முதற்சீரிலேயே "ஆம்-துணர்" என்றார். தமாலத்துணரும் அசோகபல்லவங்களும்தாம்' என்று தாம் என்றசொற்கொடுத்துச்சிறப்பித்தார். அவையே என்ற பொருளில் 'தாம்' என்னுஞ்சொல் வந்தது எனக் கொள்க. சிறப்புப்பொருளில் கொள்ளாமற்பிரிநிலைப் பொருளில்கொள்ளினும்அமையும்; அவையேபெருத் திருத்தலின் ஒன்றோடொன்று மிக நெருங்கிப் புதியதொரு கலவைப்பூங் கொத்தாகி அசைந்தன, வேறு பூக்கள் இருந்தன எனின் அவற்றிற்கு அங்கு இடமில்லை என்று கூறுகின்றார் எனினும் ஒக்கும். ஆதலினால், வேறுள பூக்களை மேலே இரண்டு அடிகளால் கூறுகின்றார். பொருளும் முடிவும் சேராத இடத்தைக் காணவில்லை. உவகையிற்றோய்ந்தே இத்தகைய புதிய உலகத்தைப் படைத்துள்ளார். இப்புதுமை உவகையில் அன்றி வேறெங்கே பூக்கும். புனைந்துரைக்கவேண்டும்என்று எழுவோர் இதற்குள் ஐந்நூறும் அறுநூறும் பாடல்கள் பாடி முடித்திருப்பார். அப்போக்குத் தோலாமொழித்தேவருடையதன்று என இதுவரையும் பன்முறையும் வற்புறுத்தியுள்ளோம்; ஆதலின் இங்கே விரித்துரைக்க வேண்டா.

19. மேலே அந்நாட்டு அரசனைப்பற்றிக்கூறுகின்றார் தேவர். இமையவர் உலகொடு தொடர்புடைய விஞ்சையருலகைப் புகழ்கின்றார். ஆதலின் இந்திரனுக்கு

யானை யொன்று சிறந்து விளங்குவதை மனதிற்கொண்டு இவ்வரசனுக்கும் யானையைத் தந்தே பன்முறையும் சிறப்பிக்கின்றார் தேவர். வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தினும் சிற்சில இடங்களில் தமிழ்ப்பாக்கள் இனிப்பதில்லை. அத்தகைய விடங்களில்அந்தச் சொற்களை மொழிபெயர்த்தோ வேறுவகையால் உணர்த்தியோ நம் பழந்தமிழ்ப் புலவர்கள் வழங்கி வந்தனர். கைகேசி என்ற சொல் கம்பர்காதிற் கினித்ததோ. அச்சத் தெலுங்கு எழுதிய புலவர்கள் வடமொழிப்பெயர்களை மொழிபெயர்த்தமைத்துப் பாடுவதைக் காண்கின்றோம். 'ஜ்வலனஜடி' என்பது இவ்விஞ்சையர் வேந்தன்பெயர். தமிழின்பத்தை அறிந்த தோலாமொழித்தேவர் அதனை அவ்வாறே பாட்டில் வைக்க அஞ்சுகின்றார். அழற்பெயர் (ஜ்வலநம்) அதன்பின் 'சடி' வரும். எனவே ஜ்வலந ஜடி என்பது அவன் பெயர்;அப்பெயர் அவனுக்கேற்றதே யாகின்றது. மூவுலகத்தும் அகன்று பரவுகின்றது. பெரியவனாகி வளர்ந்தபோது தனக்கேற்கும் பெயரைப் பிறக்கும்போதே,—"உலகிற்கோர் எரிமுடி" எனப் பெயர் பெற்ற இவன் பெருமையை எங்ஙனம் பேசுவது? அழிவிலாத சீருடையான் இவ்வரசன்.பிறப்பிலேயே பேறுடையானாய் அழியாதசீரைப்பெற்ற மானயானை மன்னர்கோனாகும் மற்றம் மாநகர்க்கு வேந்தன்.

20. (அங்கண்ஞாலம்என்பதனைச்சுட்டுப்பொருளிற்கொண்ட தோலாமொழித்தேவர்இங்கண் ஞாலம் எனப் பாடுகின்றார். எதுகை நோக்கு இங்கு இல்லை. இக்கண்ஞாலம் என்று பாடும் உலைக்களத்துச் செவி தோலாமொழித் தேவர்க் கில்லை.) அந்நாட்டு வேந்தனுடைய தண்ணருட் குடைநிழல் அங்குமட்டுமின்றி இவ்வுலக எல்லையினும் வந்து குளிர்ந்தொளிர்கின்றது. அரசநிலையின் உயர்வை இதனினும் உயர்த்திப் பாடுவது எங்ஙனம்? ஈதன்றோ விஞ்சையுலகின் உயர்வு. பல அரசர்களும் வணங்கி நிற்க, வெற்றியிற் சிறந்தோன் இப்பெரியோன். இன்ப உலகில் இன்பத்தை மறக்கப் போமோ?வெற்றி என்றதும், குத்தும் வெட்டும் கொலையும் களவுமன்றோ நம் மனக்கண்ணெதிரே கூத்தாடுகின்றன. அப்பேய்களை ஓட்டிவிடுகின்றார் தோலாமொழித்தேவர். அவனுடைய இன்பத்திற்கு இடையூறே இல்லை என்பது தோன்றுதல் காண்க. 'மார்பிலே குங்குமக் குழம்பு பூசியுள்ளான்; மேலே மெய்ப்பூச்சும் திகழ்கின்றது. பரந்த மார்பு ஒளிர்கின்றது. அதன்மேற் பட்டதும் ஊற்றின்பத்தால் மாலையின் மொட்டுக்கள் மலர்கின்றன. அங்குள்ள தேனையுண்டு வண்டுகள் இசைப்பாட்டுப் பாடுகின்றன. மணமும் அழகும் இசையும் தேனும் மலரும் பூச்சும், வலியும் சாந்தும் இன்ப வெள்ளத்தே மூழ்கிப் பொங்கி வழிகின்றன. பிறவுலகிற் சென்று பாயும் அருளும், பிறமன்னர் முடிகவிழ்க்கும் ஆற்றலும், இயற்கையோடிசைந்த இன்பமுமே இவ்வரசன் வடிவம்.

21. ஈதெங்ஙனம்கைகூடும்? அவன் அவ்வாறுஉயர்வு பெற்ற வழியினை மேலே விளக்குகின்றார் தேவர். கல்வியிற் சிறந்தவன் இவ்வரசன். ஆதலின் இன்பமும் வெற்றியும் இணைந்து அருளாய் உருப்பெறுவதில் வியப்பென்ன? மற்றையோர் அரசரது வலியினுக்கு அஞ்சி அடிமையாவர்.இவன் நாட்டிலோ அறிவினுக்கஞ்சி அறிவு பொய்க்காது மெய்வழியே செல்லும் என அவனுக்கடங்கி வாழ்கின்றனர் அவனுலகோர். நல்வழி நிற்போன் பெறுவது துன்பமே எனச் சிலர் தவறாகக் கருதுகின்றமையை மறுத்து உரையாட, இவன் தானெண்ணிய இன்பங்களை எல்லாம் அந்த அருளோ டிணைந்த அறிவுவழியே நடந்து பெற்றான் என்று வற்புறுத்துகின்றார் தேவர். அவனைக் கண்டாலும் அவ்வுண்மை தோன்ற வில்லையா? நிமிர்ந்து நிற்கும் செம்பொன் முடியைக் காண்மின்! கச்சையாற் பொலிகின்ற யானைமீது மானத்தைக் காக்கும் வேலேந்திஇமையவர்அரசனேபோல அவன் பொலியும் பொலிவினைக் காண்மின். கண்டோர் கண்ணைக் கவர்ந்து அக்கண்ணை அவர்கள் மூடினும் உள்ளே அகக்காட்சி தந்து ஒளிர்கின்ற இன்ப ஊற்றாம் அரசமாலையினைக் காண்மின். அறிவும் அருளும் ஆற்றலும் இன்பமும் இவற்றிலே மிளிரவில்லையா? ஈதோ பேசுகின்றான் பார்மின்! என்னே வியப்பு. வெச்சென்ற சொல் ஒன்றும் காணோம். வஞ்சமும் பொய்யுமின்றி மெய்ம்மையே பேசுகின்றான். மெய்ம்மை நிலத்தே வளர்ந்து மெத்தென்ற இன்சொல்லாம் அன்பு நீர் பாய்ச்சப் பெற்று, அறிவுநிலவினும் இன்ப மழையினும் அருள் நிழலினும் ஆற்றலெனும் இளவெயிலினும் வளரும் இவ்வரசமரம் மானத்திலே கண்ணுய் எண்ணியபடி ஓங்கி வளர்ந்து இன்புற்றுஇன்புறுத்துதல் ஒரு வியப்போ? இத்தகைய அரசன் விஞ்சையருலகிற்கோர் சிறப்பியல்பன்றோ? இத்தகைய அருமை பெருமையைப் பாராட்டி யன்றோ "பீடியார் பேசுவார்" என நுதலிப் புகுந்தார்.பயாபதியினும் வேறாக இந்த ஜ்வலநஜடி ஒளிர்வது காண்க."விச்சையில்முற்றிய சிறப்பினை இன்பத்தோடியையவைத்து உயிரோவியமாக எழுதிக்காட்டிய சிறப்புத் தோலாமொழித் தேவர்க்குப் பலவகையாலும் உரியதாகும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா
I.D.L. பிருங்காமலக தைலம்
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்த சிறுமணைக்கு எண்ணெய்
காஸ்ட்ராலக்ஸ்
ஜவரேக்
சகல எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

தற்காலக் கொள்கைகளும் தமிழும்

பொய்திகழும் உலகநடை யென்செல்கேன் என்சொ
பொழுது போக்கே தென்னிலோ [ல்கேன்
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவ மலாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ அதையறிகிலேன்
மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட
வரையினெடு செம்பொன் மேரு
மால்வரையின் முதுகூடும் யோக தண்டக்கோல்
வளைந்து சயவிருது காட்டி
மெய்திகழும் அஷ்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே.

—தாயுமானவர்.

"தற்காலக் கொள்கைகளும் தமிழும்" என்பதைத் தற்காலத்துவமும் தமிழும் என்றுங் கூறலாம். தற்காலமாவது யாது? தற்காலத்துவம் யாது? தற்காலத்துவத்தின் சொரூபம் தமிழில் எப்படிக் காணப்படுகின்றது, என மூவகை வினாக்களுக்கிடையே இக்கட்டுரையின் முன் நோக்கம் முனைந்து நிற்கும்.

தற்காலத்தில் பலதுறைகளில் மாந்தர், மேலான நடவடிக்கை யாது? அதற்குச் செய்யவேண்டிய முயற்சி யாது? அவ்வாறு செய்தாலன்றி நாம்எடுத்த பிறவிக்குஉரியகடனை இயற்றவில்லையன்றோ? எனக்கொண்டு உழைப்பது எதுவோ அதுவே அவ்வவருக்குத் தற்காலக் கொள்கை யெனினும் அமையும். அவை எத்தன்மை எய்தி முடியவேண்டுமென்று சிலர் ஆராய்ந்தும் பலர் ஆராயாமலும் உழைத்து வருகின்றனர். நமது தேசமோ, ஆத்மவிசாரணைக்கே கால்முழுதும் போக்கித் தன் வாழ்நாளைப் பறிகொடுத்த தேசமாகும். ஆதலால் கல்வி வளரவளர இத்துறையிலேயே முழுகுவது எவ்வகை மாந்தருக்கும் பெரியஉவகையாய் நின்றது. பற்பல தமிழ்ப் பண்டிதர்களும் பெரியோர்களும், சைவம், வேதாந்தம், ஜைனம், பௌத்தம், வைணவம், கிரிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயநெறிகளின் கொள்கைகளை விளக்கி, எவ்வாறு அவ்வவற்றில் தமிழ்மொழி பயன்பட்டதுஎன்பதையும், அவை அதனில் எத்தகைய ஏற்றம் பெற்றன என்பதையும், தமிழ் இலக்கிய வாயிலாக எடுத்துக் காட்டுவார். இதன்றியும் அச்சமயங்களை யெல்லாம் குழம்பும்படி நமதுதேசம் தத்தளித்தவகைகளையும், நமது தேசிய இலட்சணமும், அது தமிழில் திகழ்வதையும் அவர்களது கட்டுரைகளினின்று நாம்அறியலாம்.

நமது ஆட்சி சுயஆட்சியாயில்லாமல், பரதேசத்தினர் ஆட்சியாய் இருக்கின்றதேயென்று வருந்துவார் பலர். சில காலத்திற்கு முன்னர் காலஞ்சென்ற ஆனி பெசன்ட் (Annie Besant) அம்மையார் நமது மதத்தில் ஆழ்ந்து வேதாந்த விசாரணை செவ்வனே நடத்திப் பூகவத்கீதைமுதலிய பல நூல்களை மொழிபெயர்த்து ஒரு அவதார மூர்த்தியென்று பெயரும் எடுத்த அத்தகைய மாட்சிமை யுடையோரும், இராஜாங்கத் துறையான விசாரணையி லிறங்கி இந்தியர் சுயராஜ்ஜியம் அடைவதற்கும் முன்னேற்றம் அடைவதற்கும் முயர்ச்சிகள் எடுத்துப் பலவகை கஷ்டங்கள் அநுபவித்துப் பின்னர் மேலுலகத்திற்கு நம்மை விட்டுப் பிரிந்து சென்றனர். இம் மாதுசிரோன்மணியார் வைதீக உணர்வினிற்கு ஈடெனக்காட்ட நமதி தேசத்தில் அந்தணருமில்லை. பக்தியோகத்தில் சிறந்த காந்தியடிகளும் இத்துறையிலேயே பல வருடங்கள் கழித்தார். இது நமது தேசத்தின் இக்கால ஒழுக்கங்களின் ஒரு முகமாயும் நிற்கின்றது. ஆதலால் தேசிய மென்பதும் ஒருவகைச் சமயமாகஇக்காலத்தில் முன்வந்து நிற்கின்றது.

இத்தேசிய சமயத்திற்கு முதுகெலும்பாய் நிற்பது நமதுநாட்டுச் சமுதாயச் சனவிணக்கத் தத்துவமேயாம். நமது நாட்டிலோ தொன்றுதொட்டுக் குலாசார பேதங்கள் ஏற்படலாயின. இவற்றை நமது சமயகுரவர்களும் கண்டிக்கவே முயன்றனர்.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குலமுங் கொண்டேன் செய்வீர்?
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே" 1.

"குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் றன்னைக்
குலவரையன் மடப்பாவை யிடப்பா லானை
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ் செஞ்சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே." 2.

"குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே!
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னருளர் அஞ்சுவ தென்னுக்கே" 3.

—அப்பர்.

என்ன, மனிதனுக்கு மனிதனைப் பிறப்பினால் பேதப்படுத்துகின்ற குலாசாரத்தைக் கண்டிக்க முயன்றும் அவை களையப்படவில்லை. ஆரிய நாகரிகத்தில் வசித்த கௌதம சாக்கிய முனி ஆரிய விப்பிரர்களை (Brahmins among the aryas) நோக்கி, அவர் மனிதனுக்கு மனிதன் பேதம் செய்பவர்களென்றும் அதனால் அவர் ஈனசாதியாரென்றும் கண்டிக்கலாயினர். ஆரியர் போதித்த "சனாதன" தர்மத்திற்கு எதிராக அதை மறுத்ததுபோலச் "சத்தர்மம்" என்பது எது எனப்போதித்து நிர்வாணமார்க்கத்தை விளக்கிஅவர் நிரூபித்தது யாவரும்அறிவார். அவர் போதித்தவிஷயங்கள் சீனதேசத்தில் உள்ள பௌத்த ஸ்மிருதிகளால் விளங்கும். அங்குள்ள புத்தகாலயத்தினின்று மொழிபெயர்க்கப்பட்ட ,'லங்காவதார சூத்திரம்" ("Langavatara Sutra"—D. T. Suzuki) முதலான நூல்கள் மனிதனுக்கு மனிதன் பேதமாகக் கூடாதென்றும், பேதப்படுவது அறிவும்ஒழுக்கமும் தவிர வேறு ஒன்றிலும் இல்லையென்றும், ஒழுக்கத்தால் ஜாதிவேற்றுமை ஏற்பட்டாலும் அது தேகத்தில் பிறந்ததுஅல்லவென்றும், அதை எளிதல் மாற்றக் கூடுமென்றும்,

“வடதிசைப் பார்ப்பான் தென்திசைக் கேகில்
நடையது கோணிப் புலையனவன்
தென்திசைப் புலையன் வடதிசைக் கேகில்
பழுதற வோதிப் பார்ப்பானவன்”

என்று கபிலர் கூறியதுபோல் எடுத்துக் காட்டி, நால்வகைவருணபேதங்களை யொழிக்கமுயலும்பௌத்த சமயமானது நமது தமிழ்நாட்டில் முற்காலத்தில் எவ்வாறு உழைத்ததென்பது மணிமேகலை முதலிய இலக்கிய நூல்களினால் விளங்கும். அச்சமயத்தின் பழையமுறையைக் கடைப்பிடித்து ஆதித்திராவிடர்களையும் ஏனைய மனிதவகுப்புக்களையும் உயர்த்தற்கு முயல்வதே அறிஞர் கடனெனவும், இதை அடிப்படையாகக் கொள்ளலே தமது தேசியச் சீரின் தலையங்கமென்றும், அது இன்றேல் விமோசனம் நமக்கில்லை என்றும் கொண்டு, ஆசாரச் சீர்திருத்தங்களே (Social Reform) கவனிக்கவேண்டிய முக்கியவிஷயமாக அத்துறையில் உழைப்பவர் பலர்.

கீழ்ஜாதி மேல்ஜாதி என்னும் பகுதிகளை ஒழிக்கப் பலர் முயர்ச்சி செய்கின்ற இக்காலத்திலேயே, மேலோர் கூறியவாறு “ஜாதியிரண்டொழிய வேறில்லை” யாதலால், ஆண் உயர்ந்தது பெண் தாழ்ந்ததுஎன்று வாழ்நாள் நடத்தும் இல்லங்கள் தேசஆட்சிக்கு மாட்சி தாராதென்றும், ஆண்பெண் என்னும் இருவரும் எல்லா நிலையினும் சமத்துவம் பெறவேண்டுமென்றும் உழைப்பவர் சிலர்.

இதன்றியும், விவசாய வியாபாரம் முதலிய தொழில்களில் நமது தத்துவக் கலைகளைப் பயன்படுத்தி நம்மனோரை முன்னேற்றம் பெறச் செய்வதே நமது வாழ்நாளின் முக்கிய நோக்கம் என்று மன்றாடுவர் பலர். இதன் பலனாகவே ஐக்கிய நாணயச்சங்கங்கள் (Co-operative society) ஆங்காங்கு ஏற்படலாயின. இத்தகைய கொள்கைகள், முயர்ச்சி, உழைப்பு போராட்ட முன்நோக்கங்களால் வந்ததும் வரக்கூடியதுமாயிருக்கின்ற பலன்கள்யாவும் தமிழில் காணப்படுமன்றோ ? (தொடரும்)

ஆட்டாரோ அந்தத் தலை

(சிறு கதை)

கூர்ச்சர தேசத்து அரசனுடைய அரண்மனையின் வாயிற்காவலாளர் இருவர். காலையிலிருந்துமாலைவரையிலும் வருடம் வருடமாக அவ்வாயிலில் உட்கார்ந்துகிடப்பதைவிட இவர்கள் செய்கின்ற வேலை வேறொன்றுமில்லை. ஓயாமல் இவ்விருவரும் எப்பொழுதும் பேசிக்கொண்டேயிருப்பது வழக்கம். குறிப்பொன்றுமில்லாமல் பேசுகின்ற பேச்சுப் பலவாறாகப் பெருவகுதுண்டு. பெருகியதன் பயனாகத் தங்களுடைய நிலைமை மிகவுந் தாழ்ந்ததென்றும், மனிதன் தன்னுடைய சுகத்திற்கும் பிறருடைய நன்மைக்கும் செய்யக் கூடியதும் சாதிக்கக் கூடியதும் எவ்வளவோ இருக்க, காலையிலிருந்து மாலைவரையிலும், மறுபடி மாலையிலிருந்து காலைவரையிலும், ஒரு அரண்மனையின் கடைவாயிலிற் கிடந்து அழுகுவது ஏனென்றும்இவர் சிந்திக்கத்தலைப்பட்டார்கள். அரசர்களும் அமைச்சர்களும் வணிகச் செல்வர்களும் வேதியர்களும் வீரர்களும் புலவர்களும் அவ்வாயிலின் வழியாகப் போய்வருவதைப் பார்க்கப்பார்க்க இவர்களுடைய இதயங்கள் துடித்தன. அன்னவர்களில் ஒருவன் தானும் ஏனோ ஆகப்பட்டாதென்று இருவரும் தனித்தனி ஆசைப்பட்டனர். ஆயினும் ஒருவன் மற்றவனுக்கு அவ்வாசையை வெளிப்படுத்தவில்லை. இது கேட்டுப் பரிகசிப்பானோ அவன் என்று இவனும் நாணினான், அவனும் நாணினான். இப்படியே பலகாலம் கழிந்தது.

நெடுங்காலம் பிள்ளையில்லாமலிருந்த கூர்ச்சரதேசத்தரசனுக்கு ஒரு ஆண்பிள்ளை பிறக்கவே அவன் தனது ஆட்களில் ஒவ்வொருவனுக்கும் ஐம்பது பொன் கொடுத்தான். இந்தப்பொன் தம்கைக்கு வந்தபிறகு அவ்விரு வாயில் காவலாளர் கொண்டிருந்த ஆசை பின்னும் அதிகமாகி, தாம் பெரியபெரிய காரியங்கள் செய்வதற்கே பிறந்திருப்பவர் என்ற நம்பிக்கையைச் சிறிது சிறிதாக எடுத்துப் பேசத் துணிந்தனர். அரசனுடைய அரண்மனைவாயிலில் உட்கார்ந்து அழுகிக் கிடக்கின்ற இவ்விழிவான வேலையைவிட்டு வேறாகதி தேடிக்கொள்ளவே வேண்டுமென்று அவர் மனங்கள் துடித்தன. ஆயினும் இவ்வெண்ணத்தை ஒருவன் மற்றவனுக்கு வெளிப்படுத்த அஞ்சினான்.

கையிற் பணமும்சிறிதுகிடைத்தபின் உள்ளத்தின் ஆசையை நெடுங்காலம் அடக்கிவைப்பதோ அரிது. ஒருநாள் இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது இவ்வெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு ஏற்றவொரு சந்தர்ப்பம் வாய்த்தது. அப்பொழுதும் வாயினால் அதனைச் சொல்லவில்லை. “நாம் இந்த வேலையைவிட்டுப் போய்விட்டால் என்ன?” என்ற குறிப்புத் தோன்ற ஒருவன் தன் தலையை அசைத்துச் சாடைகாட்டினான்; மற்றவன், “அதுவே சரி” என்ற சாடை தோன்றத் தன் தலையை எதிரசைத்தான். இருவரும் கைகோத்துக்கொண்டு உற்சாகமுடன்புறப்பட்டார்.

புறப்பட்டுச்சென்ற இவர் தாம் இன்னது செய்வதென்று தெளிவதற்குச் சிறிதுகாலமாயிற்று. “இவ்வுலகில் மனிதன் கல்வியாலும் செல்வத்தாலும் புகழினாலும் பெருமை அடைகின்றான்; இன்பத்திற்கு ஆதாரமாயிருப்பவைகளும் இவைகளே; ஆகையால் இவைகளை முறையே பெறப்புகுவோம்” என்றுகல்வி கற்கத் துவக்கினர்.

கல்வி கற்கும் இக்காரியம் முதலில் இவர்களுக்கு மிகவுங் கஷ்டமாக விருந்தது. பிறகு இதனால், முன் இவர் எண்ணியும் அறியாப் புதியபுதிய விஷயங்கள் தெரியவரத் தலைப்பட்டதும் கல்வியின் பொருட்டு அதிகம் உற்சாகங்கொண்டனர். இறுதியில், இத்தனையுங் கற்றுத்தெரிந்துகொள்வதால் என்ன பயன் என்ற சந்தேகம் தலைகொண்டது. கையிலிருந்த ஐம்பது பொன் கரையக்கரைய இந்தச் சந்தேகத்துடன் ‘பின் என்னசெய்வேம்’ என்னும்பயமும் கலந்துகொண்டது. இந்த நிலையில் இவர் மனத்தில், “இப்படிச் செய்துவிட்டால் என்ன!” என்றவொரு எண்ணம் அடிக்கடி தனித்தனி தோன்றியது. ஆயினும், அதனை ஒருவன் மற்றவனுக்குச் சொல்ல நாணினான்.

தாங்கள் கற்ற கல்வியைக் கொண்டேனும், கற்றிருக்கும் மற்றவர் வாழ்க்கை நடத்தும் வகையைக் கண்டேனும் இனி இக்கல்வியைப் பின்தொடர்வதற்கு அவர்கள் மனம் உடன்படவில்லை யாகையால், பொருள் ஈட்டுவதே பெரிய காரியம் என்று பேசிக்கொள்ளத் தலைப்பட்டனர். வேறொன்று செய்துவிடுவதே நலம் என்று முன் அடிக்கடி தோன்றிய எண்ணமும் சற்று மறைந்திருந்தது.

பிச்சை கைக்கூலி களவு வர்த்தகம் ஆகிய இவை நான்கும், பொதுவாக, பொருள் தேடும் வகைகள். பிச்சை இழிவென்று விட்டார், கைக்கூலி சிறிதென்று விட்டார், களவு கஷ்டமென்று விட்டார். வர்த்தகர்களாய் முடிந்தனர்.

இந்த வர்த்தகமும் முதலில் இவர்களுக்கு மிகவுங் கஷ்டமாக இருந்தது. பிறகு, தாம் எண்ணாத வகையெல்லாம் செல்வம் மேன்மேலும் பெருக்கத் தலைப்பட்டு, அச் செல்வத்தைத் தாம் முன் எண்ணியிராத வகைகளில் எல்லாம் செலவு செய்யக் கூடியவர்களானபோது வர்த்தகத்தில் இவர் அதிகம் உற்சாகங் கொண்டனர். எனினும், இறுதிவரையில் இவ்வுற்சாகம் இருப்பதற்கில்லை. தங்களுக்குக் கடன்பட்டவர் பலபேர்களானார்கள். கடன் கொடுத்தாலன்றி வியாபாரம்நடப்பதில்லை. தமக்குவரவேண்டிய கடனைநம்பித் தாமும் பல பேர்களுக்குக் கடன்காரர் ஆயினார். தாம் கொடுத்துள கடனை வருத்தி வருத்தி வாங்குவதும், தம்மை வருத்துகின்ற கடன்கார்களுக்குக் கொடுப்பதும், இடையில், பணத்தை வழித்துக் கொடுத்த தம் புறங்கையை நக்குவதும், இவ்வளவுதானா இந்த வர்த்தகம் என்பதெல்லாம் என்னவேயெண்ணி யெண்ணி ஏங்கலானார். இந்தத் தொல்லையை இனி இவர்களால் தாங்க முடியவில்லை. வியாபாரத்தைவிட்டு ஒடிவிடுவதே தக்கதென்று தீர்மானித்தனர். அப்புறம் என்ன செய்வது! இந்நிலையிலும்இவர் மனத்தில், "இப்படிச் செய்துவிட்டால்தான் என்ன?" என்றவொரு எண்ணம் அடிக்கடி தனித்தனி தோன்றியது. ஆயினும் அதனை ஒருவன் மற்றவனுக்குச் சொல்ல நாணினான்.

கல்வியும் பார்த்தாய்விட்டது, பொருளும் பார்த்தாய் விட்டது; புகழ் ஒன்றுதான் இன்னும் இவர்கள் பார்ப்பதற்கிருந்தது. அந்தப் புகழையும் நாடிப்பார்ப்பதெனத் தீர்மானம் செய்தனர். எப்படி?

கல்வியால் புகழைப் பெற்றிருக்கலாம்; ஆனால் அக்கல்வியை இவர் இடையே விட்டுவிட்டனர். மேலும், கற்றவர்களைக் கற்றவர்கள்தாம் புகழக்கூடும்; ஆயினும் பொறாமையால் புகழ்வதில்லை;கல்லாதவர்களோ கல்வியின் பெருமையை அறிந்து புகழக்கூடத் தெரியாமல் போய்விடுகின்றனர். ஆகையால், இவ்வழியோ ஏற்றதன்று.

செல்வத்தால் புகழை வாங்கி யிருக்கலாம்; ஆனால் அந்தச் செல்வமோ இவர்செய்த வர்த்தகத்தில் சேரமாட்டேன் என்றுவிட்டது. மேலும், செல்வத்தால் வாங்கிய புகழை மேலும்மேலும் அச்செல்வத்தைச் செலவுசெய்தே காப்பாற்றிக்கொண்டு வரவேண்டும். ஆகையால்.செல்வம் குறைந்துவிட்ட தானால் புகழுந் தேய்ந்துவிடும். ஆகையால் இந்தவழியும் ஏற்றதன்று. அரண்மனையின் வாயிற்காவலை விட்டு வெளிப்புறப்பட்ட இவ்விருவருக்கும் இதன்மேல் என்ன செய்வதென்று தெரியவில்லை. "இனி,ஒன்றுதான் செய்வதற்கிருக்கின்றது, அதையே செய்துவிட்டாலோ" என்ற எண்ணம் மாத்திரம் தனித் தனி இவர் மனங்களை முன்னினும் அதிகமாக இங்நிலையிற் பற்றிக்கொண்டது. ஆயினும், அதனை ஒருவன் மற்றவனுக்குச் சொல்ல நாணினான்.

இப்படி யிருக்கும்போது ஒரு நாள், செய்வதற்கு அரிய செயல்களைச்செய்து அதனால் எல்லோரும்தம்மைப் புகழும்படி ஆகலாமே, என்றநினைவு இவர்களுக்கு உதித்தது. இன்னது செய்வது என்று தெரியாமல் எதனையோ செய்யத்தான் வேண்டும் என்று எண்ணுகின்றவர் எல்லாரும் எதன் தலையில் கை வைப்பார்களோ அதன் தலையிலேதான் இவர்களும் கை வைத்தனர்—அரசியல். தம் நாட்டிலுள்ள தீமைகளையெல்லாம்போக்கி வறுமையை ஒழித்துவிடுகின்றோம் என்று புறப்பட்டனர். முதலில் ஒரு கட்சிசேர்ப்பதும், அந்தக்கட்சிக்குத் தம்மைத் தலைவர்களாக்கிக் கொள்வதுங் கஷ்டமாக இருந்தது. ஆயினும், அந்த ஆரம்பக்கஷ்டத்தைக் கடந்தபின் ஜனங்கள் தம்மைப்பாராட்டிப் பின்தொடர்வதைக்கண்டு மிகவும்உற்சாகம் அடைந்தனர். எனினும், தம் கட்சியில் சேர்ந்தவொவ்வொருவனும் தாம் மேற்கொண்டகாரியத்திற்கு இடையூறாகவே இருப்பது கண்டனர். தாம் பெற்ற புகழைக்காட்டிலும் கொடுத்த பொறாமையே அதிகம். இதற்கிடையில், இவர் முயற்சியினால் ஒரு தீமையும் ஒழியவில்லை, நன்மைகள்தான் சில தீயவைகள் ஆயின. ஒரு வறுமையும் குறையவில்லை, அதன் வருத்தந்தான் அதிகமாயிற்று. இப்பொழுது இவர் புகழ் பெருகாமையுடன் இருக்கின்றபெயரும் கெட்டுவிடும்என்னும் அச்சம் உண்டாயிற்று. இந்நிலையில், தான்இத்தனைகாலமாகநினைத்துக்கொண்டிருக்கின்ற அவ்வொன்றை இனிச் செய்துவிடுவதென்றே அவனும் எண்ணினான், இவனும் எண்ணினான். ஆயினுமென்; இருவரும் அதை வெளிப்படுத்தக் கூசினார். ஆகையால், இவர் கால்வைத்த வெள்ளம் இனி இவர்களை இழுக்கின்றபடியெல்லாம் அலையவேண்டியதாயிற்று.

எடுத்த காரியம் மேலே நடக்கவேண்டும். அரசன் தான் எல்லாவற்றிற்கும் இடையூறாகஇருக்கின்றான் என்றுமுதலில்தாம் எண்ணும்படி தம்மையே தூண்டிக்கொண்டுபிறகுசனங்களையும்அவ்வாறுஎண்ணும்படி தூண்டிவிட்டனர். புரட்சிசெய்து அரசனைத் துரத்திவிடுவதுபோல் சுலபமான காரியம் வேறொன்றுமில்லை. அதனைக்காட்டிலும் அனாவசியமானதும் வேறு இல்லை. சுலபமும் அனாவசியமும் ஆகிய காரியங்களைச் செய்வதற்கே சனங்கள் முன்வருவார்களாதலால் இந்தப்புரட்சி மிகவிரைவில் பரவியது. கூர்ச்சர தேசத்தரசனைத் துரத்திவிட்டார்கள். அந்நாடும் குடியரசாயிற்று. தீமையும் வறுமையுமோ தீர்ந்ததில்லை.

மூடரும் துஷ்டரும் துன்மார்க்கர்களும் குடியரசுக்குத் தலைவர்களாவதைக் கண்டனர். தம்முடைய பேரைச் சனங்கள் வாயோயாமல் சொல்லக் கேட்டனரேயன்றி உண்மைப் புகழொன்றுந் தமக்கு வாய்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டனர். ஆயினும், மூடரும் துஷ்டரும் துன்மார்க்கர்களுமாகிய இக் குடியரசுத்தலைவர்களைநீக்கிவிட்டுவேறுபேர்களை அமைத்தால் நாட்டினுக்கு நன்மையுண்டாகி அதனால் தமது புகழ் நிலைக்கலாம் என்று எண்ணினார். இன்னொரு புரட்சிக்குச் சனங்களைத் தூண்டி, மூடரும் துஷ்டரும் துன்மார்க்கர்களும் ஆகிய இத்தலைவர்களை நீக்கினார். ஆயினும், அவர்களுக்குப் பதிலாக, துன்மார்க்கர்களும் துஷ்டர்களும் மூடர்களுமே தலைமைவகிக்கக் கண்டனர். இனி, என்ன செய்வார்கள் இவ்விருவரும். இத்தனைகாலமாக, 'தாம்ஒன்று செய்துவிட்டால் தான் என்ன' என்னத் தனித்தனி நினைத்திருந்ததையும் இனிச் செய்ய வழியில்லாமல் போயிற்று.

இதற்கிடையில், ஒரு அரசனை வீணாகப் பாழாக்கினோமோ என்ற நினைவு அவர் மனச்சாக்ஷியை உறுத்தியது. மீண்டும் ஒரு பெரிய புரட்சிசெய்து தமது அரசனைக் கொணர்ந்து சிம்மாதனத்தில் ஏற்றினார். அன்றைய இரவெல்லாம் இவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. தாம்ஒன்று செய்துவிட்டால்தான் என்ன, என்று அடிக்கடி தனித்தனி எண்ணியும் சொல்வதற்குக் கூசியிருந்த அதனைச் செய்வதற்கு இப்பொழுது மீண்டும் வழி யேற்பட்டுவிட்டபடியால், அதனையே தான் காலையில்எழுந்ததும் முதற்காரியமாகச்செய்துவிடுவதென்று தனித்தனி துணிந்தனர்.

பொழுதுவிடிந்தது.ஆயினும், தான் எண்ணியதை வாய்திறந்து சொல்ல இவனும் வெட்கப்பட்டான், அவனும் அப்படியே. கடைசியில், இவன் அவனைப் பார்த்து ஏதோ குறிப்புத் தோன்ற தலையை ஆட்டினான்; அவனும் முகம்மிகமலர்ந்து அக்குறிப்பிற்கு உடன்பாடுதோன்ற தன் தலையை ஆட்டினான். உடனே கைகோத்து நடந்துவந்து அரசனது அவ்வரண்மனை வாயிலில் தத்தம் பழைய இடங்களில் அமர்ந்தனர்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

1000 வருடத்திய காலண்டர்:—ஆங்கிலக் காலண்டரின்படி, 1800 வருடம் முதல் 2900 வரையில் எந்தத் தேதி எந்தக் கிழமையில் வருகின்றதென்று தெரிந்துகொள்ள விரும்பினாலும் அதனை எளிதில் கண்டுபிடித்துக் கொள்ளக்கூடிய முறையொன்றை, சென்னைப் பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்; உயிர் இரக்க நல்வழி மன்றத்தார் பிரசுரஞ் செய்துளர். அது எம் பார்வைக்கு வந்துளது. இது தெரிந்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 3. தபால் கூலி வேறு.

* * *

1929 வருடத்திய கலாநிலய வால்யூம் எம்மிடம் இல்லை. அதனைப்பெற விரும்புகின்றவர் அனேகர் இருக்கின்றனர். வைத்துக் கொண்டிருப்பவர்களில் விற்க விரும்புகின்றவர் யாரேனும் இருந்தால் தயை செய்து எமக்குத் தெரிவிக்கவும்.

—மானேஜர், கலாநிலயம்.

* * *

பறவை நாடு:—எல்பிங்குக்கு அடுத்துள்ள ட்ராசின்சி என்னும் பிரதேசத்தில் பாரசீக கவர்ன்மெண்டார் பட்சிகளுக்காக 1,385 ஏக்கர் நிலங்களை விட்டிருக்கின்றனர். அந்தப் பகுதிகளில் துப்பாக்கிகளைக் கொண்டு சுடவோ, கற்கள் முதலியவற்றை உபயோகிக்கவோ கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அங்கு நீர்வாழும் பட்சிகளுக்கென்றே தனி ஏரி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏராளமான நீர்க்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இன்னும் சில காலத்தில் ஏராளமான பட்சிகள் பெருகி அவ்விடமானது பட்சிகள் வாசஸ்தலமாக மாறிவிடுமென்று கருதப்படுகின்றது.

பெரிய முட்டைகள்:—பூசணிக்காய்கள் அளவிலுள்ள பெரிய பெரிய முட்டைகள் ஆயிரக்கணக்கான பவுன் விலை மதிக்கப்பெற்று லண்டனில் ஏலம் கூறப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த முட்டைகள் 1858ம் வருடம் மடகாஸ்கார்த் தீவிலிருந்து கண்டெடுக்கப்பட்டவை. இவை 13 அங்குலம் நீளம் 9 அங்குலம்சுற்றளவு முள்ளன. இந்தமுட்டைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிச் சரித்திரமும் வழங்கப்படுகின்றது. இந்த முட்டைகள் ஆக் என்ற பக்ஷிகள் இட்டதென்று கூறப்படுகிறது. காப்டன் குக் என்ற கடல் யாத்ரீகர் 1779-ம் வருடம் 165-முட்டைகளைப் பத்திரமாகச் சேகரித்தாராம்.

விமானக் குருவி:—மேனாட்டினர் விமானங்களைக் கண்டுபிடித்து ஆகாயத்தில் பறக்கிறார்கள். இவர்களுக்கு இந்த விமானத்தின் அமைப்பைக் கற்றுக்கொடுத்தது யார்? குருவிகளே கற்றுக்கொடுத்தன. இவற்றை மரங்கொத்திக் குருவியென்று அழைப்பார்கள். இந்தக்குருவிகள் குஞ்சுகளை வெகு பக்குவமாகப்பாதுகாக்கும். குஞ்சுகளுக்கு ஆபத்தென்று கண்டால் அவற்றை கால்களுக்கு இடையில் பக்குவமாகப்பிடித்துக்கொண்டு வேறிடங்களுக்குப் பறந்து போய்விடும். இவைகள் குஞ்சுகளைத் தூக்கிக்கொண்டு போகும்போது கவனித்தால் ஒரு சிறு விமானம் பறந்து போவதுபோலிருக்கும். இவற்றைக்கண்டே விமானம் செய்ய ஒருவர் கண்டுபிடித்தாரெனக் கூறுகிறார்கள். இந்தக் குருவிகளிடம் மற்றொரு விசேஷமுண்டு. இந்தக்குருவிகளின் கண் எப்படி அமைந்திருக்கிறதென்றால், அவைகள் பின்பக்கமும் பார்க்கமுடியும். ஒரே நிலையில் இந்தக்குருவிகள் நாலாபக்கமும் பார்க்கமுடியும். ஆகவே விரோதிகள் இவற்றை எளிதில் பிடித்துவிட முடியாது.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த ப்யன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)